பக்கங்கள்: [illegible]

Registered [illegible]

உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2029 மாசி 11 திங்கட்கிழமை (23-02-1998) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 75

ஜனாதிபதிக்கு எதிராக சபையில் பிரேரணை!

தினேஷ் குணவர்த்தன கோரிக்கை

கொழும்பு, பெப்ரவரி 23

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அமெரிக்க ரைம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டி இலங்கை எதிரணி அரசியல் வட்டாரங்களில் கடும் எதிர்ப்பைத் தோற்றுவித்து வருகிறது. மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன ஜனாதிபதிக்கு எதிராக நாடாளுமன்றத்தில் பிரேரணை கொண்டுவரப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வாக வட பகுதி நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் தலைவரிடம் பத்து வருட காலத்துக்கு ஒப்படைக்க தாம் விருப்பம் கொண்டிருந்ததாகவும் —

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்ற சமயம் இந்த யோசனை தெரிவிக்கப்பட்டதாகவும்— ரைம் சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

இந்தகருத்தே தற்பொழுது அரசியல் வட்டாரங்களில் சர்ச்சையைக் கிளப்பி வருகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதியின் கருத்தைக் கண்டித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

திருமலையில் தாக்குதல்

கொழும்பு, பெப். 23

திருகோணமலைமாவட்டத்தைச் சேர்ந்த மல்லிகைத் தீவில் நேற்று முன்தினம் பிற்பகல் மூன்று மணியளவில் இரண்டு விடுதலைப் புலிகள் பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-9)

புலிகள் ஷெல் வீச்சு

வவுனியா, பெப். 23

மட்டக்களப்பில் பட்டிருப்பு பாலத்தில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை முதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட இத் தாக்குதலின் போது ஏற்பட்ட சேதவிவரம் தெரியவரவில்லை. (இ-3)

இலங்கைபடையின் சூட்டுக்கு இந்திய மீனவர் ஒருவர் பலி!

சென்னை, பெப். 23

தமிழ்நாடு இராமேஸ்வரத்திலிருந்து கடலில் மீன் பிடிக்கச்சென்ற தமிழக மீனவர் ஒருவர் இலங்கைக் கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார்—

நேற்று முன்தினம் இரவு கச்சதீவுக்கு அருகே இச்சம்பவம் இடம் பெற்றது. இலங்கைக் கடற்படையினர் எந்த வித முன்னெச்சரிக்கையும் இன்றி தன்னிச்சையாக சுட்டார்கள் என்று தப்பிவந்த மீனவர்கள் தெரிவித்தனர். (இ-9)

கிளிநொச்சியில் மோதல்!

கொழும்பு, பெப். 23

கிளிநொச்சி மாவட்டம் தட்டுவன்கொட்டி என்ற இடத்தில் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் அதிகாலை 2.45 மணியளவில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்த மோதலில் புலிகள் தரப்பில் பலத்த இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என படைத் தரப்பினர் தெரிவித்தனர்.

மோதலின் பின்னர் அப்பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் விடுதலைப்புலி ஒருவரின் சடலத்தையும், ரி-81 ரகத் துப்பாக்கி இரண்டு, கைக்குண்டுகள், வானொலிப்பெட்டி ஆகியவற்றையும் கண்டெடுத்தார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9)

சுற்றிவளைப்பு

சுதுமலை, பெப். 23

நேற்று அதிகாலை கொக்குவில், குளப்பிட்டி, உயரப்புலம், ஆனைக்கோட்டை, ஆறுகால்மடம், காக்கைதீவு பகுதிகளில் படையினர் தேடுதல் நடத்தினர். (இ-139)

சர்வஜன வாக்கெடுப்பு மே மாதம்

கொழும்பு, பெப். 23

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் தொடர்பாக மே மாதத்தில் சர்வஜன

(10 ஆம் பக்கம் பார்க்க)

நிறுத்தப்பட்ட வாகனங்கள் மீது நுவரெலியாவில் பொலீஸார் சூடு!

பாதுகாப்புக் கருதி நடவடிக்கையாம்

கொழும்பு, பெப். 23

நுவரெலியா நகர மத்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நான்கு வாகனங்கள் மீது பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இந்த வாகனங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேர்ந்ததாக பொலீஸார் பின்னர் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தவாகனங்கள் பொலீஸ் அதிகாரி அலுவலகத்துக்கு அருகில் உள்ள குயீன் எலிசபெத் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமயம் தாக்குதலுக்கு உள்ளாகின.

அவற்றின் உரிமையாளர்கள் அந்த வாகனங்களுக்கு அண்மையில் இருக்காததால் சந்தேகம் கொண்டு பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனால் நுவரெலியா நகர முதல்வரின் தண்ணீர்த் தாங்கியிலும் சேதம் ஏற்பட்டுள்ளது.

அதே சமயம் நீண்ட நாள்களாக தமது வாகனங்களை அதே இடத்திலேயே நிறுத்தி வருவதாக வாகன உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் புலிகளின் தாக்குதல்கள் நடக்கலாம் என எதிர்பார்க்கும் பொலீஸார் பாதுகாப்பு காரணங்களுக்காக இத்தகைய தாக்குதல்களை நடத்துகின்றார்கள் என்று அரச தரப்பு தெரிவித்தது.

முச்சந்தி முரளி

அப்ப நிண்டாலும் ஓடினாலும் சூடு தான்.....!

வெள்ளவத்தையில் படையினர் தேடுதல்

கொழும்பு, பெப். 23

கொழும்பு வெள்ளவத்தையில் கடந்த இரு நாள்களாக இரவு நேரத்தில் தமிழரின் வீடுகளில் படையினர் தேடுதல் நடத்தினர்.

வெள்ளி, சனிக்கிழமைகளில் இரவு நேரத்தில் தேடுதல் நடத்திய படையினர் அவர்களைப் படம் எடுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

படையினர் இரவு உடைகளுடன் பெண்களைப் படம் எடுத்ததாக அங்குள்ள தமிழர்கள் தெரிவித்தனர். (இ-3)

வவுனியாவில் கிரனேட் செயல் இழக்கவைப்பு

குண்டுச் சத்தத்தால் நகரில் பதற்றம்

வவுனியா, பெப். 23

வவுனியா பிறவுண் கம்பனிக்கு அருகில் கைப்பற்றப்பட்ட இரு கிரனேட்டுக்களில் ஒன்று செயலிழக்கச் செய்யப்பட்டபோது நகரில் பதற்றம் ஏற்பட்டது.

குப்பைக்குள் இருந்து இரு கிரனேட்டுக்கள் நேற்று முன்தினம் காலை படையினரால் கைப்பற்றப்பட்டன.

அவற்றில் ஒன்று குண்டு செயலிழக்கச் செய்யும் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டது.

அப்போதே நகரில் பதற்றம் நிலவியது. (இ-164-3)

கொடிகாமம் சந்தைப் பகுதியில் நேற்றுக் காலை கிரனேட் வீச்சு

நால்வர் காயமடைந்தனர்

யாழ்ப்பாணம், பெப். 23

கொடிகாமம் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தின் போது நான்கு பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

கொடிகாமம் சந்திப் பகுதியில் தேநீர் கடைக்கும், நகைக்கடை ஒன்றுக்கும் சமீபமாக வீசப்பட்ட இக் கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் தேநீர்க் கடை உரிமையாளரான கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் (வயது 42), மரக்கறி வாங்கச் சந்தைக்கு வந்தவர்களான மீசாலை வடக்கைச் சேர்ந்த கந்தன் கணபதிப்பிள்ளை (வயது 61), குமரன் கைலாயபிள்ளை (வயது 44) ஆகியோரும், அருகில் இருந்த மற்றொரு கடை ஒன்றில் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த 30 வயது மதிக்கத்தக்க ஒருவருமே இந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

படையினரின் வாகனம் அமுக்க வெடியில் சிக்கியது

வன்னியில் அறுவர் காயமடைந்தனர்

நேற்று முன்தினம் மாலை வன்னிப் பகுதியில் இடம்பெற்ற அமுக்க வெடி தாக்குதலில் 6 படையினர் காயமடைந்தனர்.

மாங்குளத்திலிருந்து ஓமந்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் இதில் சிக்கியது.

காயமடைந்தவர்கள் அனுராதபுர ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-21)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

BOSCO
INSTITUTE
25, றக்கா றோட், யாழ்ப்பாணம்.
நிகழ்ந்தகவு
A/L 98
வினர விடை
திரு. T. தவசேகர்
ஆரம்பம்- 24—2—98
காலை 6 30
(53592)

BARATHY
சித்தன்கேணி
A/L 97
மாணவர்களுக்கு
மீட்டல்
வினா - விடை
சகல பாடங்களும்
ஆரம்பம்: 24—2—98
3 மணி
(53590)

புகையிலை, ஹெந்தலவில்

வடமராட்சி, பெப். 23

புகையிலை, வெங்காயம் ஆகிய சுடாநாட்டு உற்பத்திப் பொருள்கள் தென்பகுதிக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி முடித்துள்ள "ஹெந்தல"

விற்பனைக்கு

ஜேணிபஸ், 36 ஸ்ரீ உழவு இயந்திரம்25ஸ்ரீஉழவுஇயந்திரம், தண்ணீர் பவுசர், தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்பானப்பெட்டிமற்றும் ஏனைய தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
தில்லையம்பலம் சரஸ்வதி
சின்னமடுவடி,
ஊர்காவற்றுறை.
(53591)

வெங்காயம் கொழும்புக்கு

கப்பலில் கடந்த சனிக்கிழமை முதல் இவை ஏற்றப்பட்டு வருகின்றன.

இவற்றுடன் பழைய அலுமினியங்கள், இரும்புகள் என்பனவும், குடாநாட்டுக்கு ஏற்கனவே தனியார் வர்த்தகர்களினால் எடுத்து வரப்பட்ட அத்தியாவசியப் பாவனைப் பொருள்களில் பழுதடைந்த சில பொருள்களும் இங்கிருந்து ஏற்றிச் செல்லப்படவுள்ளன.

இப்பொருள்கள் யாவும் தனியார் வர்த்தகர்களினாலேயே கப்பலில் எடுத்துச் செல்லப்படுகின்றன.

(ஐ-173)

ஒய்வு பெற்றார்

திருநெல்வேலி, பெப் 23

காங்கேசன்துறை மயிலிட்டி மார்பு நோய்வைத்தியசாலையில் கடந்த 10 வருடகாலமாக பொறுப்பதிகாரியாகப் பணியாற்றிய டாக்டர் வி. சிவராசா தமது 37 வருட அரச சேவையிலிருந்து ஆண்மையில் ஒய்வு பெற்றுள்ளார்.

காங்கேசன்துறை மயிலிட்டி மார்புநோய் வைத்தியசாலை தற்போது காவகச்சேரியில் இடம்பெயர்ந்து செயற்பட்டு வருகின்றது (ஐ-135)

பாலர் ஆசிரியராக..

மேற்படி பயிற்சி பெற க.பொ.த(சா/த)தகைமை உடையோரும், மேல் தகைமை யுடையோரும் தபால் வழியில் ஆறுமாதத்தில் பயிலலாம்.

பாலர்
ஆசிரியர் சங்கம்,
20, அச்சகஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.
(53588)

கெருபிடிகள் குறித்து மக்கள் குழு விசனம்

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். குடாவில் போக்குவரத்துச் செய்யும் இளைஞர்களும், யுவதிகளும் படையினரின் காலல் நிலைகளிலும் தடை முகாம்களிலும் கெடுபிடிகளுக்குள்ளாக்கப் படுவது குறித்து சமாதானத்துக்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு விசனம் தெரிவித்துள்ளது.

வடபிராந்திய இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் பனகல்ல யாழ்.நகரக் கொமாண்டர் சுஸந்த மென்டிஸ் ஆகியோர் உட்பட படை உயர் அதிகாரிகள் சிறப்புடன் கடமையாற்றிக் கொண்டிருக்கும் இவ்வேளை யில் அவர்களுக்கு கீழ் நிலையிலுள்ள படையினர் இலரின் இத்தகைய நடவடிக்கைகள் அவர்களுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் செயலாக அமைந்து விடும் என்று மேற்படி குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அடிமட்ட நிலையிலுள்ள படையினருக்கு விசேடமாக காவல் நிலைகளிலும், தடை முகாம்களிலும் கடமையாற்றும் படையினருக்கு மக்களிடம் பழகும் விதம் குறித்து போதிக்க வேண்டும் என்றும் இக்குழு இராணுவ உயர் பீடத்தைக்கேட்டுள்ளது.

(இ-5)

மருந்து விநியோகம்

திருநெல்வேலி, பெப். 23

தெல்லிப்பழை அரசினர் மாவட்ட வைத்தியசாலைக்கு யாழ். சுகாதார திணைக்கள மருந்துக் களஞ்சியப் பகுதியினர் இன்று திங்கட் கிழமை இவ்வருட முதலாம் கந்தாயத்திற்கான மருந்து வகைகளையும் மற்றும் வைத்திய உபகரணங்களையும் நேரடியாக திணைக்கள வாகனம் மூலம் கொண்டு சென்று விநியோகம் செய்ய வுள்ளனர். (ஐ-135)

விறகு வெட்டச் சென்றவர் மிதிவெடியில்

புன்னாலைக் கட்டுவனில் உள்ள தமது வீட்டுக்கு விறகு வெட்டச் சென்றவர் அங்கு மிதிவெடியில் சிக்கிக் காய மடைந்தார்.

புன்னாலைக் கட்டுவனில் இருந்து இடம்பெயர்ந்து சுதுமலை வடக்கில் வசிக்கும் அல்பிரட் யூட்குரூசின் (19 வயது) என்பவரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவராவார்.

(இ-139-3)

மரண அறிவித்தல்கள்

சிற்றம்பலம் கார்த்திகேசு

(ஒய்வு பெற்ற அதிபர் யா/புன்னாலைக்கட்டுவன் மகாவித்தியாலயம்)

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், இளவாலையை வதிவிடமாகவும் கொண்ட சி. கார்த்திகேசு 21-2-98 சனிக்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் திருமதி கா. அம்பிகையின் (இளைப்பாறிய உதவி ஆசிரியை, யா/மெய்கண்டான் வித்தியாசாலை, இளவாலை) கணவரும், திருமதி சிவயோகம் (வேல மூர்த்தி (ஒய்வு பெற்ற ஆசிரியை), திருமதி சிவஞான சக்தி வித்தியானந்தம், திரு. திருஞானசம்பந்தமூர்த்தி ஆகியோரின் தந்தையாரும், திரு வை. கணேசமூர்த்தி (இளைப்பாறிய அதிபர், யா/நகுலேஸ்வர வித்தியாசாலை, கீரிமலை), காலஞ்சென்ற வை. வித்தியானந்தம் மற்றும் திருமதி தி. கனகமணி ஆகியோரின் மாமனாரும், திரு க. பேரானந்தரன் (கட்டட ஒப்பந்தக் காரர்), திருமதி சிவானி, சிவகோசாரியார், திரு வி. உளாசன் (துபாய்), செல்வி வி. துவாரகா (யா/பல்கலைக்கழகம் நுண்கலைப்பிரிவு 3ஆம் ஆண்டு மாணவி) ஆகியோரின் பேரனும், சி. அச்சுதன், சி. சுரேன், சி. கபிலா பே. கிரிஜனன், பே. சுகேதன் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மயிலணியில் 22-2-98 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா. திருஞானசம்பந்தமூர்த்தி
(மகன்)

மயிலணி ஒழுங்கை,
சுன்னாகம். (53576)

கந்தையா பாலச்சந்திரன்

(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவுப் பணியாளர் ஆணைக்குழு, வட-கிழக்கு மாகாண சபை, திருகோணமலை)

சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வர் கந்தையா பாலச்சந்திரன் 18-2-1998 இல் திருகோணமலையில் சிவபதமடைந்தார்.

அன்னார் சுபத்திராதேவியின் அன்புக் கணவரும், சயந்தன் (யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்) அன்புத் தந்தையும், நிர்மினியின் அன்பு மாமனாரும், நிருஷாந்தன், திலேஷ்குமார், லாவண்யா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தர்மகுலரத்தினம் மற்றும் திருமதி நிலைநாதன் (பேபி—கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்ற பொன்மலர், காலஞ்சென்ற தர்மலிங்கம் மற்றும் அமிர்தலிங்கம் (கொழும்பு), ஆச்சிமுத்து, கோசல கிருஷ்ணன் (பிரான்ஸ்), சிவலிங்கம் (கனடா), காலஞ் சென்ற பூலோகராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-2-98 (செவ்வாய்க்கிழமை) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 10.00 மணியளவில் வழுக்கையாறு மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி பா. சுபத்திராதேவி
(மனைவி)
பா. சயந்தன்
(மகன்)

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (53577)

யாழ்/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்

பழைய மாணவர் சங்கம்

மேற்படி சங்கத்தால் 22 - 02 - 1998 ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள்.

1 ஆம் பரிசு	—	4551
2 ஆம் பரிசு	—	5740
3 ஆம் பரிசு	—	2770

பரிசு பெற்றோர் காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

G. செல்வராணி
தலைவர்

S. தர்மகுலசிங்கம்
செயலாளர்

(சி/2950)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர் ஆறுமுகம் தம்பித்துரை

மறைவு: 25 - 01 - 1998

காலமெனும் எமக்காவே வாழ்த்துவந்த கடைசியில் காலனின் தூதர்களாம் கயவர்களின் கொடுமை பொறுக்காது இக்காசினியில் வாழ்வை வெறுத்து பொன்னுலகாம் விண்ணுலக வாழ்வைக் காண்பதற்கு சென்றனையோ எம் அதிசயமே!

31 நாள்கள் அல்ல 31 பிறவியெடுத்தாலும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது.

நாளை 24-02-98 எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்தியநிகழ்விலும் மற்றும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அன்புடன் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

காலையடி,
பண்டத்தரிப்பு.

தகவல்: மகன்மார்
த. தவராசசிங்கம்,
த. குணத்திலகம்,
த. பாலசூரியன்
(53589)

விற்பனைக்கு

கொழும்பில் பிரபல மான வர்த்தகப் பகுதியில் தொழிலாளர்கள் நிறுத்துவதற்கு வசதியுள்ள இடத்தில் இரண்டுமாடிக் கட்டடம் (டாம் வீதி) விற்பனைக்கு உண்டு. யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையத்திற்கு மாற்றீடாகவும் செய்துகொடுக்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

இல. 703,
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.
(53561)

நெல்லியடி
மஹாத்மா
வெண் திரையில்
23—2—98 திகதி முதல்
அர்ஜுன் - சிரஞ்சீவி
நடித்த
கொண்டாட்டம்
காட்சிகள்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
(சி/2756)

விடேட்டி சினிமா
அச்சுவேலி.
35 அடி
அகலத் திரையில்
சனிக்கிழமை முதல்
அர்ஜுன் - சிரஞ்சீவி
நடித்த
கொண்டாட்டம்
புதிதும் புதிய வெளியீடு
குடும்பச் சித்திரம்
காட்சி நேரம்
10-30, 2-30.
(53059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளின்ரன் இவ்வருடம் பதவி துறப்பார்!

பிரபல ரியூனிஸ் சோதிடர் ஆரூடம்

ரியூனிஸ், பெப். 23

அமெரிக்க அதிபர் பில் கிளின்ரன் இவ்வாண்டு முடிவதற்குள் பதவி விலகுவார். ஈராக் நெருக்கடி இந்த இவவேனிற் காலத்துடன் சமரசத்துக்கு வரும்.

இவ்வாறு ஆரூடம் தெரிவித்துள்ளார் பிரபல ரியூனிய ஜோதிடர் ஹசன் சார்னி.

வேல்ஸ் இளவரசி டயானாவின் மரணம் தொடர்பாக முன்கூட்டியே ஆரூடம் கூறி உலகின் கவனத்தை தன்னிடம் ஈர்த்து பிரபல்யம் பெற்றவர் ஹசன் சார்னி.

ஏ எப்.பி செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டி ஒன்றில் அமெரிக்க அதிபரின் எதிர்காலம் குறித்தும், ஈராக் நெருக்கடி பற்றியும் அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

கிளின்ரனின் பதவி விலகல் அவரது அரசியல் எதிர்காலத்தின் முடிவின் அடையாளமாக இருக்கும்.

சொந்த வாழ்வில் அவர் சிக்கலான மனப்போராட்டத்துக்குள்ளாகியுள்ளார். அணையும் ஒளிக்கதிர் போன்று அவர் தற்போது உள்ளார்.

ஈராக் நெருக்கடி மார்ச் மாதத்தில் இருந்து வேகம் தணிந்து, உயர்ந்து செல்லும் எனவும் அவர் ஆரூடம் தெரிவித்தார். (ஐ)

உத்தரப்பிரதேச மாநிலத்தில்
கல்யாண்சிங் அரசு கவிழ்ந்தது!

லோகதந்திர காங்கிரஸ் தலைமையில் புதிய அரசு?

லக்னோ. பெப். 23

இந்தியாவில் சனத்தொகை கூடிய மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் ஆட்சியில் இருந்த பாரதிய ஜனதாக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசு சனிக்கிழமை இரவு பதவியில் இருந்து கவிழ்ந்தது.

கூட்டணி அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை இரண்டு கட்சிகள் திடீரென வாபஸ் பெற்றுக் கொண்டதை அடுத்தே கூட்டணி அரசு பெரும்பான்மையை இழந்தது.

லோகதந்திர காங்கிரஸ், ஜனதாதளஸில் இருந்து பிரிந்து சென்ற ஜனதாதன ராஜாராம் பாண்டே பிரிவு ஆகிய இரு கட்சிகளுமே மாரதிய ஜனதாக்கட்சிக் கூட்டணிக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொண்டன.

இதனையடுத்து மாநில ஆளுநர் றொமேஸ் பண்டாரி கூட்டணி அரசைக் கலைத்தார். லோகதந்திர காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜெகதாம் பிரசாவால் புதிய முதல்வராகப் பதவி ஏற்றுள்ளார். அக்கட்சியின் மற்றொரு தலைவரான நரேஷ் அகர்வால் துணை முதல்வராகவும், வேறு 16 பேர் அமைச்சர்களாகவும் பதவியேற்றுள்ளனர்.

புதிய அரசு நாளை செவ்வாய்க்கிழமைசட்டப்பேரவையில் தனது பெரும்பான்மையை நிருபிக்கவேண்டும் என ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

இந்திய தேசிய காங்கிரஸ், சமாஜ்வாதி, பகுஜன் சமாஜ் ஆகிய கட்சிகளின்ஆதரவுடன் புதிய ஆட்சி அமைக்க தம்மால் முடியும் என்று லோகதந்திர காங்கிரஸ் கட்சி தெரிவித்துள்ளது.

நேற்று பொதுத் தேர்தல் வாக்களிப்புநடைபெறவிருந்த சமயத்தில் உத்தரப்பிரதேச மாநிலத்தில் கல்யாண்சிங்கின் அரசு திடீரென வீழ்ச்சி கண்டது பாரதியஜனதாக்கட்சிக்கு ஒரு பின்னடைவு என அவதானிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் —

கல்யாண்சிங் அரசைக் கலைக்க ஆளுநர் எடுத்த முடிவு செல்லுபடியாகாது எனத்தெரிவித்த கல்யாண்சிங்கின் அமைச்சரவையில் கல்வி அமைச்சராக இருந்த நரேந்திரசிங் அலகதாபாத் உயர் நீதிமன்றில் மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அந்த மனுவை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் கல்யாண்சிங் அரசை பதவியில் நீடிக்கவைக்கும் உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

நீதிமன்றத்தின் அந்த உத்தரவின் பாஸ் பிரதமை முதல்வர் கல்யாண்சிங் நேற்று அதிகாலை ராஜ்பவனில் ஆளுநர் றொமேஸ்பண்டாரியிடம் ஒப்படைத்தார். ஆனால் உயர் நீதிமன்ற உத்தரவின் மூலப் பிரதி தமக்குத்தரப்பட வேண்டும் என்று ஆளுநர் கேட்டுள்ளார். (ஐ-8)

உண்ணாவிரதப் போரில்
குதித்தார் வாஜ்பாய்!

ஆளுநரைப் பதவி விலக்குமாறு கோரி

லக்னோ, பெப். 23

உத்தரப் பிரதேச மாநிலத்தில் கல்யாண்சிங் தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சிக் கூட்டணி அரசை கலைத்துவிட்ட மாநில ஆளுநரின் செயலைக் கண்டித்து பாரதிய ஜனதாக் கட்சித்தலைவர் அடல்பிஹாரி வாஜ்பாய் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளார்.

சனிக்கிழமை இரவு கல்யாண்சிங் அரசு கலைக்கப்பட்டதை கேள்வியுற்ற உடனேயே லக்னோவில் தமது வீட்டில் இருந்தவாறே அவர் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்.

நேற்று வாக்களிப்பு ஆரம்பமானதும் அவர் வாக்களிக்கச் சென்றார். பின்னர் தொடர்ந்து உண்ணா விரதத்தை மேற்கொண்டார்.

உண்ணாவிரதம் இருக்கும் இடத்தை அவர் நேற்று மாலை புதுடில்லிக்கு மாற்றுவார் என பி.ஜே.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

சாகும் வரையான தனது உண்ணா விரதத்தை கைவிடுவதற்கு வாஜ்பாய் நிபந்தனை ஒன்றை விதித்திருப்பதாக நேற்று நண்பகல் அளவில் அறிவிக்கப்பட்டது.

கல்யாண்சிங் அரசைக் கலைத்த ஆளுநர் றொமேஸ் பண்டாரியை உடனடியாகத் திருப்பி அழைக்குமாறு ஜனாதிபதியிடம் வாஜ்பாய் கேட்டுள்ளார். [ஐ]

பிளாஸ்ரிக் தொலைக்காட்சித் திரை

லண்டன், பெப். 21

பிளாஸ்ரிக் இனாலான தொலைக் காட்சித் திரையை பிரிட்டிஷ் மற்றும் ஜப்பானிய விஞ்ஞானிகள் இணைந்து கண்டு பிடித்துள்ளனர்.

இரு மி.மீ. தடிப்பு இந்த கறுப்பு, வெள்ளை தொலைக்காட்சித் திரை நேற்று முன்தினம் பாவனைக்கு வந்துள்ளது. முழு அளவிலான வர்ண தொலைக் காட்சித் திரை இந்த வருடப் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்னும் மூன்று ஆண்டுகளில் விற்பனைக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

★ 'எல் நைனோ' அனர்த்தம்:

2 லட்சம் கோழிக்குஞ்சுகள் வெப்பத்தால் மரணம்!

ஹொண்டுரஸ், பெப். 23

கடும் அனற்காற்று காரணமாக ஹொண்டுரஸ் நாட்டில் 2 லட்சத்துக்கு மேற்பட்ட கோழிக்குஞ்சுகள் மடிந்துள்ளன.

'எல்- நைனோ' எனப்படும் காலநிலை அனர்த்தத்தின் காரணமாகவே நாட்டின் வட பகுதியில் கோழிக்குஞ்சுகள் பலியாகியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

வழமையாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதகாலப் பகுதியில் அதிகரிக்கும் வெப்பநிலை இவ்வாண்டு பெப்ரவரி மாதத்திலேயே ஏற்பட்டிருப்பது ஆச்சரியமாக உள்ளதாக ஹொண்டுரஸ்ஸின் தேசிய கோழிப் பண்ணைத் தயாரிப்பாளர்களின் சங்கத் தலைவர் கிறிகோரியோ சோனிகா தெரிவித்தார்.

எல்- நைனோ காலநிலை அனர்த்தம் காரணமாக உலகின் பலவேறு பகுதிகளிலும் அழிவுகளும் இயற்கை அனர்த்தங்களும் ஏற்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

2 ஆம் கட்ட வாக்களிப்பு நேற்று மந்தமாக நடந்தது

புதுடில்லி, பெப். 23

இந்தியப் பொதுத் தேர்தலின் இரண்டாவது கட்ட வாக்களிப்பு நேற்று நடைபெற்றது.

தமிழ்நாடு உட்பட ஒன்பது மாநிலங்களிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் உள்ள மொத்தம் 183 மக்களவைத் தொகுதிகளில் நேற்று வாக்களிப்பு இடம் பெற்றது. பீஹார் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் பொதுவாக வாக்களிப்பு அமைதியாக நடந்த போதிலும் வாக்களிக்கச் செல்வதில் மக்கள் ஆர்வம்காட்டவில்லை என்றும் வாக்களிப்பில் மிக மந்தநிலையையே பரவலாக அவதானிக்கப்பட்டதாகவும் ஏஜென்ஸி செய்திகள் தெரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

BOSCO INSTITUTE
A/L 97, 98
வினா விடை வகுப்புக்கள்
ஆரம்பம்:- 25 - 02 - 98 (புதன்)
காலை 9 - 00 A. M.
எல்லாப் பாடங்களும் ஆரம்பத்தில் இருந்து முழுமையாகக் கற்பிக்கப்படும்.
PHY. — திரு. ம. ஸ்பெல்மன்
CHE. — திரு. லே. அன்பழகன்.
APP. — திரு. சி. சிவலோகநாதன்
PUR. — திரு. சி. சிவலோநாதன்
ZOO. — வழமையான ஆசிரியர்
BOT. — பிரபல ஆசிரியர்
றக்கா றோட், யாழ்ப்பாணம்
(53583)

ஸ்பெயின் அதிகார பகிர்வை ஒத்த ஐ. தே. க. யோசனை

அடுத்த மாதம் சமர்ப்பிக்கப்படும் எனத் தகவல்

கொழும்பு, பெப். 23

அரசாங்கத்தின் அரசமைப்புச் சீர்திருத்த யோசனைக்கு மாற்று யோசனையாக ஐக்கிய தேசியக் கட்சி முன்வைக்கவுள்ள யோசனைகள் அடுத்த மாதம் நடுப்பகுதியிலேயே நாடாளுமன்ற தெரிவுக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இதற்கென மாற்று யோசனைகளைத் தயாரிக்கும் ஐ. தே. க. குழு எதிர்வரும் வியாழக்கிழமை கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

மாற்று யோசனைகள் தொடர்பாக குழு அங்கத்தவர்கள் மத்தியில் கருத்து வேற்றுமைகள் நிலவுவதால் அவற்றைச் சமரசப்படுத்த கால தாமதம் ஏற்படுகிறது — என்று குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திலும் கீழ் மட்ட அரசாங்கங்களிலும் பகிரப்பட வேண்டும் என்பதை பிரதானமாகக் கொண்டே ஐ. தே. க. தனது மாற்று யோசனைகளை முன்வைக்கவுள்ளது. அதேவேளை பிராந்தியங்களுக்கு ஓரளவு காணி அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் பிராந்தியங்கள் குடியேற்றத் திட்டங்களை மேற்கொள்வதை தடைசெய்யும் பட்சத்தில் உறுதியான நடவடிக்கை இருக்க வேண்டும்.

வடக்கு கிழக்கு இணைப்பு அதிகாரபூர்வமாக இணைய வேண்டும் என்பன எமது யோசனைகளில் பிரதானமானவை.

13 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம், மங்கள முனசிங்க தலைமையிலான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கை அடிப்படையிலும், ஸ்பெயின் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அதிகாரப் பகிர்வு யோசனைகளின் அடிப்படையிலும் எமது யோசனைகள் அமையுமென்— என்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை —

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வுள்ள ஐ. தே. கவின் யோசனைகள் குறித்து தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் இவ்வாரம் ஐக்கியதேசியக் கட்சியின் மாற்று யோசனைகள் குழுவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளன. (ஐ 8)

கலந்துரையாடல்

நவாலி, பெப். 23

பளைப்பிரதேச செயலர் பிரிவிலுள்ள சகல விளையாட்டுக் கழகங்களையும் புனரமைப்புச் செய்வது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

சகல விளையாட்டுக் கழகங்களின் செயலாளர், தலைவர்களையும் தவறாது இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு பளைப் பிரதேச செயலர் சுப்பிரமணியம் புத்திசிகாமணி கேட்டுள்ளார். (ஐ-100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

8 ஆயிரத்து 919 பேர் கடந்த ஆண்டு தற்கொலை

இலங்கைக்கு 'கின்னஸில்' இடம்

வவுனியா, பெப். 23

உலகின் அதிகளவானோர் தற்கொலை செய்து கொள்கின்ற நாடு என்ற பெருமையை இலங்கை பெற்றுள்ளது. இதன் மூலம் அது உலக சாதனைகளைப் பதிவு செய்யும் 'கின்னஸ்' புத்தகத்திலும் இடம் பிடித்துள்ளது.

இலங்கையில் சராசரியாக ஒரு மணித்தியாலத்துக்கு ஒருவர் வீதம் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

ஒவ்வொரு ஒரு லட்சம் பேரிலும் சராசரியாக 44 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனராம். கடந்த வருடம் மட்டும் 8ஆயிரத்து 919 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

இவ்வாறு இலங்கையில் தற்கொலை செய்து கொள்வோரின் தொகை அதிகரிப்பதற்கு, சுனபமாக கிருமி நாசனிகள் கிடைக்கக் கூடியதாக இருத்தல், மன உளைச்சல், போதை மருந்துப் பாவனை ஆகியவையே காரணங்களாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஜ-9-10)

வயோதிப மாது தற்கொலை

வடமராட்சி, பெப். 23

வயோதிப மாது ஒருவர் தோட்டக்கிணறு ஒன்றுக்குள் விழுந்து மரணமானார்.

கரணவாய் மேற்கைச் சேர்ந்த நல்லதம்பி தங்கம்மா (72 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். நோயின் கொடுமை தாங்க முடியாது இவர் கிணற்றுக்குள் விழுந்து மரணமானதாக மரண விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது. இவரது மரணம் குறித்து உடுப்பிட்டி பதில் மரண விசாரணை அதிகாரி வி. நடராசா விசாரணை நடத்தினார். விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

[ஜ-173]

சமூர்த்தி நியமனம்

யாழ்ப்பாணம், பெப். 23

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 13 பேருக்கு சமூர்த்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

நியமனக்கடிதங்கள் கடந்த மாதம் உதவித்திட்டமிடற் பணிப்பாளர் வி. கனகரத்தினத்தால் வழங்கப்பட்டுள்ளன.

இதேவேளை இளைஞர்களுக்கான உத்தியோக பூர்வ நியமனக்கடிதமும், சம்பள விவரக்கொத்தும் வெகுவிரைவில் அனுப்பிவைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டது.

(ஜ-15)

பனையில் இருந்து தவறி விழ்ந்து படுகாயம்

யாழ்ப்பாணம், பெப். 23

கள் சீவுவதற்காக பனை மரத்தில் ஏறிய ஒருவர் தவறிக்கீழே விழுந்து படுகாயமடைந்தார்.

அல்வாய்ப்பகுதியில் கடந்த வெள்ளியன்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஏரம்பு யோகானந்தராசா (வயது 30) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிகசிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

(ஜ-15)

சைக்கிள் இலக்கத் தகடு வழங்க விசேட கருமபீடம்

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் சைக்கிள் இலக்கத் தகடுகள் பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதையடுத்து சனி, ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில் சாவகச்சேரிச் சந்தையில் இலக்கத் தகடுகள் வழங்குவதற்கு விசேட கருமபீடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக நகரசபை செயலாளர் மு. செ. சரவணபவ தெரிவித்தார்.

பொது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்க்கும் முகமாக இந்த கருமபீடம் அமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சாவகச்சேரி நகரப்பகுதியில் பொலீஸாரால் இடையிடையே சைக்கிள் இலக்கத்தகடுகள் பரிசோதனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (ஜ-117)

அன்பளிப்பு

உடுவிலில் அமைந்துள்ள 'ஆர்க்' சிறுவர் பராமரிப்பு நிலைய பிள்ளைகளின் வசதி கருதி உடுவில் பிரதேச பிரசைகள் குழுவினரும் கிராம சேவையாளர்களும், உடுவில் இந்து இளைஞர் மன்றமும் இணைந்து 22,500 ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றை அன்பளிப்பாக வழங்கினர். வைபவ ரீதியாக நடைபெற்ற இந் நிகழ்வில் மேற்படி அமைப்புக்கள் சார்பாக மாவிப்பாய் பகுதி பிரதேச அதிகாரி இயந்திரத்தை பாடசாலை அதிபரிடம் கையளித்தார்.

(ஜ-152)

யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்

பின்வரும் சேவைகளை
தங்களுக்கு வழங்க முன்வந்துள்ளது

★ தங்களுக்குத்தேவையானமென்பானங்களை குளிரூட்டித் தருதல்.
★ஐஸ்கட்டிகள் விநியோகம்.
★யோக்கட் விநியோகம்.

(யோக்கட் விற்பனை முகவராக செயற்பட விரும்பு பவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்)

விசேட வைபவங்கட்கும், நாளாந்த தேவைகட்கும் மேற்பட்ட சேவைகளை நாம் வழங்க காத்திருக்கின்றோம். தேவையானவர்கள் முன்கூட்டியே கீழ்க்காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

பொது முகாமையாளர்.
யாழ். மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(சி/2341)

யாழ், மாவட்ட
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ. உ)
கணக்காளர்
நிரந்தரப் பதவிக்கான
விண்ணப்பம் கோரல்

1. சம்பள அளவுத்திட்டம்

165 / 88 — 104/10 3100 — 4900
80×10 — 100×10

சுற்றுநிருபம் 31 / 97

மேற்படி பதவிக்கு கீழ்க்காணும் தகைமைகளுடையவர்களிடம் (இருபாலாரிடமும்) இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் சங்கத்தினால் வழங்கப்படும் படிவத்தில் பூர்த்தி செய்யப்பட்டு அதில் கேட்கப்பட்டவாறு சான்றிதழ்களின் பிரதிகளுடன் தலைவர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு 10—03—98 ஆம் திகதிக்கு பிந்தாது கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

2. வயது:

23 தொடக்கம் 45 வரை
(கூட்டுறவுச் சங்கங்களில் கடமையாற்றும் பணியாளர்கட்கு வயதெல்லை ஏற்புடையதன்று)

3. கல்வித்தகைமைகள்:

அ. கூட்டுறவுப் பணியாளர் சம்பளத்திட்டம் 11ல் கணக்குப்பதிவாளர் / கணக்கு அல்லது என் பார்வையிலிதர் பதவியொன்றில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர் 12ஆம் சம்பளத் திட்டத்தில் கணக்குப்பதிவாளர் / கணக்கு அல்லது என் பார்வை இலிகிதர் பதவியொன்றில் 6வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப்பதிவாளர் நிறுவனத்தில் இறுதிநிலைப் பரீட்சையில் சித்தியுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்குத் துறை / என்பார்வைத்துறையில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சிய கணக்குப்பதிவாளர் பரீட்சையில் நடுத்தர பிரிவில் சித்தியுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு என்பார்வை துறையில் மேற்பார்வை நிலை பதவியில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரப் பரீட்சை (உயர்தரம்) சான்றிதழ்/க. பொ. த. (உயர்தரம்) கணக்கியல் உட்பட மூன்று பாடங்களின் சித்தியுடன் கூடிய அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு என்பார்வைத் துறையில் மேற்பார்வை நிலை பதவியில் 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

4. பிணைப்பணம்:

கூ. வே. கூட்டுறவுச் சட்டத்திற்கமைவாக சங்கம் தீர்மானிக்கும் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

- தலைவர்

(-சி2942)

2 ஆம் கட்ட...

(மூன்றாம் பக்கத் தொடர்)

வித்தன.

கடந்த 16 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது கட்ட வாக்களிப்பின் போது பீஹார் மாநிலத்தில் நடந்த வன்செயல்களில் 23 பேர் பலியானார். அதனையடுத்து அங்கு நேற்று பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ஜ)

யாழ். BEACON
புலோலி வீதி,
M M. முன்பாக
கல்வி ஆண்டு
98, 99
G. A. O. B. A
வகுப்புக்கள்
ஆரம்பம்: 07 - 03 - 98
(சனி) முற்பகல் 9-00

ஆசிரியர் குழு

பொருளியல்
★ அன்ரனி
★ பிரபல ஆசிரியர் வர்த்தகம்
★ தேவச்சந்திரன் தமிழ்
★ கமலரூபன் மெய்யியல்
★ சத்தியசீலன் புவியியல்
★ கிருஷ்ணராஜா ஆசியல்
★ மனோகரன் இந்து நாகரிகம்
★ பிரபல ஆசிரியர் நிர்வாகி

(சி-2948)

இன்று ஆரம்பம்
A/L 98
DAY CLASS
கலை, வர்த்தகம்
பிரிவு II
காலை 8 மணி (ப. நேரம்)
D. M. I.
233, ஸ்ராண்லி வீதி,
யாழ்.
D. SAM
(சி-2949)

31-ம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக் கிருத்திய அழைப்பும்

அமரர் பூதத்தம்பி வீரசிங்கம்
(முன்னாள் தபாலதிபர்)

மலர்வு: 1923 — 06 — 19
உதிர்வு: 1998 — 01 — 25

1998—01—25 ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரண கிரியை நாளைய தினம் 1998 — 02 — 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு ஆறுதல் கூறி, எமக்கும் பல வழிகளில் உதவி புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கு எமது உளர்வு பூர்வமான நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பூசையிலும், அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
திருமதி தெ. வீரசிங்கம்
குடும்பத்தினர்.

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

[53585]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தின் கீழ்

ஓர் எம்.பிக்கு ரூ.40 இலட்சம் என்ற அடிப்படையில் ரூ.4கோடி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், பெப்.23

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்துக்கு இவ்வருடம் 4கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வருடம் பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 25 இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் யாழ். குடாநாட்டில் பத்து எம்.பிக்களுக்கும் இரண்டரைக்கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்த வருடம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு 40 இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் இது அதிகரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் இந்த நிதிக்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றி தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-5)

நாணயத் தொலைபேசி மாலுசந்தியில் நிறுவப்படும்

வடமராட்சி, பெப்.23

வடமராட்சிப் பிரதேசத்தில் கல்வாய்மாலு சந்தியில் மற்றொரு நாணயக் குற்றி தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப்படவுள்ளது.

மற்றினையில் இணைக்கப்பட்டுள்ள நாணயக்குற்றி தொலைபேசிச் சேவையை பயன்படுத்துவோரி எண்ணிக்கை அதிகரித்துள்ளதை யடுத்தே மாலுசந்தியிலும் நாணயக் குற்றி தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தப் படவுள்ளதாகவடக்கு-கிழக்கு மாகாண தொலைத் தொடர்பு பிரதி பொதுமகாவையாளர் எஸ் கனகசூரியர் தெரிவித்தார்.

அடுத்த மாதமுற்பகுதியில் இந்த இணைப்பு ஏற்படுத்தப் படும் என அவர் தெரிவித்தார்.

(ஐ-173)

கொக்குவில் பகுதியில் நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம், பெப் 23

கொக்குவில் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் இன்று திங்கட்கிழமை முதல் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பூசி போடப்படவுள்ளதாக பொதுச்சுகாதார பரிசோதகர் எஸ். திவ்வியகுமாரன் அறிவித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி வளர்ப்பு நாய்களுக்கு ஊசியை ஏற்றிக் கொள்ளுமாறு நல்லூர் பிரதேச சபை செயலாளர் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

நாய்களுக்கு ஊசி போடப்படும் இடங்களும் கால விவரமும் வருமாறு:

திங்கள்

★ முற்பகல் 9—12 மணி: உப அலுவலகம் கொக்குவில் நேதாஜி சனசமூக நிலையம், பொற்பதி வீதி.

★ பிற்பகல் 2—4 மணி: நந்தாவில் மனோன்மணி ச.ச. நிலையம். சம்பியன் ஸ்கூல் வளர்மதி ச.ச. நிலையம்.

செவ்வாய்

★ முற்பகல் 9—12 மணி கொக்குவில் மேற்கு கிராம முன்னேற்றச் சங்கம் கொக்குவில் மத்தி ச.ச. நிலையம்.

★ 2—4மணி: கொக்குவில் மேற்கு காந்திஜி ச.ச. நிலையம், ஆறுகால்மடம் வைத்திலிங்க வித்தியாலயம்.

வியாழன்

★ முற்பகல் 9—12 மணி பூநகரி வேள் அம்பாள் ச.ச நிலையம், வேம்படி கலைமகள் ச.ச நிலையம்.

★ பிற்பகல் 2—4 மணி: கொக்குவில் மேற்கு வரகி அம்மன் கோயிலடி, ஆனைக் கோட்டை பிடாரி அம்மன் கோயிலடி.

(ஐ-139)

காத்தான்குடி குண்டுவெடிப்புகள்

சிங்களக் கான்ஸ்டபிளும் மனைவியும் காவலில்!

மட்டக்களப்பு, பெப் 23

காத்தான்குடிப் பகுதியில் அண்மைக்காலத்தில் சோதனைச் சாவடிகளுக்குப்பக்கத்தில் இடம்பெற்ற பலகுண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் மட்டக்களப்பு காத்தான்குடி பொலீஸ் நிலையத்தில் பணியாற்றும் சிங்கள பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் அவரது மனைவியும் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப் பட்டுள்ளனர்.

மகிந்த ஹேரத் முதியான்சலாகே, அவரதுமனைவிவிமலாவதி(பெரியகல்லாறுளாசி) ஆகிய இருவருமே கைதுசெய்யப்பட்டு கடந்தவியாழனன்று மாவட்ட நீதிமன்றத்தில் மேலதிக நீதிபதி எஸ். தம்சணாமூர்த்தி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

மேலதிக விசாரணைக்காக தேசியப் புலனாய்வுத் தலைமையகத்துக்கு சந்தேகநபர்களை அனுப்பி வைக்க நீதிமன்றம் அனுமதி அளித்தது

(உ-21)

தம்பலகமம் படுகொலைகள்:

பொலீஸார், ஊர்காவலர் 41 பேர் மீது வழக்கு!

திருகோணமலை, பெப். 23

திருகோணமலை மாவட்டம் தம்பலகமம் பாரதிபுரம் கிராமத்தில் எட்டு தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலீஸார் மற்றும் ஊர்காவலர்கள் 41 பேருக்கு எதிராகக் கொலைக் குற்றம் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

இச்சம்பவம் தொடர்பாக நடந்த அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டப்பட்ட 41 பேரும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களை அநுராதபுரம் சிறைச்சாலைக்கு அனுப்புமாறு திருமலை நீதவான் பி. சொர்ணராஜா உத்தரவிட்டார்.

சந்தேகநபர்களில் ஒருவரான கந்தனாய் பொலீஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் வசந்த விக்கிரமசிங்க நீதிவானிடம் சமர்ப்பித்த மனுவில்—

அனுராதபுரம் சிறைச்சாலைக்கு அனுப்புவது தமக்கு பாதுகாப்பு இல்லை எனவும், எனவே தம்மை திருமலை சிறைச்சாலையில் வைக்க உத்தரவிடும்படியும் கோரினார்.

இந்த மனுவை ஏற்ற நீதிவான் அவரை திருமலைச் சிறையிலும், ஏனையோரை அனுராதபுரம் சிறையிலும் வைக்குமாறு உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் 24 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

(உ-3)

புலிகள் இயக்கத் தலைவர் ஒருவர் பலி என அறிவிப்பு

கொழும்பு, பெப். 23

திருகோணமலையில் தோப்பூர் பகுதியில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் புலிகள் இயக்க இராணுவப் பிரிவுத் தலைவர் எனக் கருதப்படும் நிதர்சன் என்பவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அவருடன் இருந்த வேறு ஒருவரும் இதில் கொல்லப்பட்டதாகவும் ஏனையோர் தப்பிச் சென்றுவிட்டதாகவும் —

அங்கு தேடுதல் நடத்திய படையினர் இரண்டு துப்பாக்கிகளையும் மற்றும் பல இராணுவ உபகரணங்களையும் மீட்டுள்ளதாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. [இ-9]

விவரம் சேகரிப்பு

கொழும்புத்துறை, பெப் 23

இடம்பெயர்ந்து வந்த உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு மீளக்குடியமர்வு கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாவைப் பெறப் பெயர் விபரங்களை இதுவரை பதிந்து கொள்ளாதவர்கள் அலுவலக நாட்களில் கொழும்புத்துறை வீதியில் உள்ள கிராம சேவை அலுவலர் பணிமனையில் பதிவு செய்து கொள்ளுமாறு கொழும்புத்துறை கிழக்கு—ஜே-62 கிராம சேவை உத்தியோகத்தர் எஸ். தேவராசா தெரிவித்துள்ளார். [ஐ-30]

விசேட அ. அட்டை பணியகம்

கொழும்புத்துறை, பெப். 23

யாழ் விசேட அடையாள அட்டைத் திணைக்களம், இல, 140, கண்டி வீதியில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அலுவலகம் முன்னால் தற்போது செயற்பட்டு வருகிறது.

இங்கு சகல ஆவணங்களுடனும் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்தால் விண்ணப்பம் கிடைத்து ஒருவார காலத்திற்குள் பூர்த்தி செய்து கொடுக்கப்படும் எனத் திணைக்களத்தின் கருதிட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார். [ஐ-30]

நெடுந்தீவில் இருந்து பங்குபற்றுவர்

நெடுந்தீவு, பெப். 23

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனம் அடுத்த மாதம் நடத்தவிருக்கும் போட்டிகளில் நெடுந்தீவு விருத்தி ஐந்து சனசமூக நிலையங்கள் கலந்து கொள்ள உள்ளன.

நெடுந்தீவு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எ. திருநாவலன் இதனைத் தெரிவித்தார். (இ-111)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை.

க. பொ. த. உயர்தரம் — கணிதப்பிரிவு

செல்வன் கணேசநாதன் ஸ்ரீவிசாகன் — 4ஏ
மாவட்ட நிலை — 3 ஆம் இடம்
(யாழ்ப்பாணம்)
அகில இலங்கையில் நிலை — 11 ஆம் இடம்

மேற்படி திறமையான பெறுபேறுகளைப் பெற்று எமது கல்லூரிக்குப் புகழும், பெருமையும் தேடித் தந்த செல்வன் க. ஸ்ரீவிசாகனையும், கற்பித்த ஆசிரியர்களையும் மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சபை
யா/புனித ஹென்றியரசர் கல்லூரி,
இளவாலை.

[53542]

வடபிராந்திய போக்குவரத்துச் சபை கோண்டாவில்

சீலிங் அடிப்பதற்கு கூறு விலை கோரல்

வட பிராந்திய போக்குவரத்துச் சபை தலைமைக் காரியாலய கட்டடத்திற்கு சீலிங் அடிப்பதற்கும், தேவையான மரங்களை வழங்குவதற்குமான கூறு விலைகள் கோரப்படுகின்றன. மரங்கள் வழங்கக் கூடியவர்களும், இவ்வேலையைச் செய்வதற்கு முன் அனுபவம் உள்ளவர்களும் வ. பி. போ. சபை தலைமைக் காரியாலயத்தில் தேவையான விவரங்களைப் பெற்று தங்கள் கூறு விலைகளை 05.03.1998 இற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

பொது முகாமையாளர்,
வ. பி. போ. சபை,
கோண்டாவில்.

[சி/2934]

ஈராண்டு நினைவஞ்சலி

பண்டிதர் சைவப்புலவர்
அமர் க. சபா. ஆனந்தர்
B. A (London), B. O. L. (Madras)
(இளைப்பாறிய அதிபர் இணுவில்)

மலர்வு: 06 — 10 — 1910
உதிர்வு: 16 — 02 — 1996
திதி: 23 — 02 — 1998 திங்கட்கிழமை

எங்கோ பிரிந்த எம் தங்கை கருணையத்
தேடி இறையடி சேர்ந்து
எம்மோடிருந்த அம்மாவையும்
ஈராண்டு முடியுமுன் அழைத்து இறைவன்
அடியில் ஆனந்தம் காணும் அப்பா!
நாம் உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்
வேளையில் எம்மை நீங்கள் ஆசீர்வதிக்கும் எண்ணம்
மண்டியிடுகின்றோம்.

தேற்றுவாரின்றித் தவிக்கும்
மகள் — திருமதி தே. அநந்ததி ஆனந்தகௌரி,
மகன்மார், மருமக்கள், பேரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

'ஸ்ரீ சாவினி'
காங்கேசன்துறை வீதி,
இணுவில். (53400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

அலுமாரி, செற்றி, சோக்கேஸ், கட்டில்கள். படிக்கும் மேசைகள், Chest of Drawers, புத்தக ராக்கைகள் மற்றும் மின்சார உபகரணங்கள் விற்பனைக்குண்டு. செவ்வாய், ஞாயிறு தவிர்ந்த நாள்களில் பார்வையிடலாம். தொடர்பு: 28. யாழ். வீதி, யாழ்ப்பாணம் [53556]

தவறிவிட்டது

பொன்னுத்துரை சிறிஸ் கந்தராஜா, உடுவில் தெற்கு, சுன்னாகம் என்னும் பெயர் மூகவரியுடைய விசேட அடையான அட்டை உடுவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் உடுவில் சேச்சடி மணியம் கடையில் தயவு செய்து ஒப்படைக்கவும். [53570]

திருத்த வேண்டுமா?

சகல ரி. வி. நிகழ்ச்சிகளையும் தெளிவாகப் பார்ப்பதற்கு அன்ரனா பொருத்தி கொள்ளவும், ரி. வி., றேடியோ, டெக், மணிக்கூடுகள் திருத்திக் கொள்ளவும் வீனஸ் தனபாலசிங்கம் Diploma In Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (சி/2843)

தவை

புதிய, பழைய, தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்களும் றோணியோ இயந்திரங்களும் தேவை. தொடர்பு: R 'மருதம் 66, மணிக்கூட்டு வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். [53554]

காணி விற்பனை

யா/திருநெல்வேலிசந்திக்கும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கும் இடையில் ஆடியபாதம் வீதியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. தங்கமாமயிலோன்பிரசித்தநொத்தாரிஸ், திருநெல்வேலி. யாழ்ப்பாணம். [53568]

திருமண சேவை

எம்மிடம் சகலமதத்தினருக்கும் எக்கவுண்டன், எஞ்சினியர், ஆசிரியர் உண்டு. குறிப்பு புகைப்படத்துடன் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமணசேவை, 178, நாவலர் றோட், யாழ்ப்பாணம். (53522)

இளைஞர் சுருக்கிட்டு தற்கொலை

வடமாரட்சி, பெப். 23

தனியான அறையில் வசித்து வந்த மனநோயினால் பாதிக்கப்பட்ட இளைஞர் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டு மரணமானார்.

பொலிகண்டி மேற்கைச் சேர்ந்த தருமுகுகனேஸ்வரன் (20 வயது என்பவரே இவ்வாறு மரணமானவராவர்.

இவரது மரணம் தொடர்பாக உடுப்பிட்டி பதில் மரண விசாரணை அதிகாரி வி. நடராசா விசாரணை நடத்த, பருத்தித்துறை பொலீசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர்.

சிறுவயது முதலேதாயை இழந்த இவர் மனம்பாதிக்கப்பட்டு மன நோயாளியாக இருந்து வந்தார். தனியான அறையில் வசித்து வந்த இவர் காலை வேளையில் வெளியே வராததினால் அங்கு போய் பார்த்த போது சுருக்கிட்டு மரணமாகி இருக்கக்காணப்பட்டதாக விசாரணையின் போது சாட்சிகள் தெரிவித்தனர். விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது. (ஐ-173)

விற்பனைக்கு

ஸ்ரூடியோ/கலர் லாப்

STUDIO & COLOUR LAB FOR SALE

கொழும்பு தெற்கு காலி வீதியில்

பிரபலமான ஸ்ரூடியோவுடன் கூடிய கலர் லேப் சகல உபகரணங்களுடனும் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

Colour Lab - Naritsu Qss

கறுப்பு / வெள்ளை பிரிண்டிங் செய்வதற்கான Dark room வசதியும் உண்டு.

வியாபாரம் பெயர் விலாசமாற்றமின்றி தொடரும் வண்ணம் சகல ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

உடன் தொடர்பு கொள்க.

Photochrome Trading (Pvt.) Ltd,
122C. Dutugemunu Street,
Kalubovila, Dehiwala.

TP. 820057
071-31177

[சி/2929]

தேவை

பிரபலமான இறக்குமதி, ஏற்றுமதி ஸ்தாபனத்திற்கு பங்காளர் தேவை. யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் இயங்கும் ஸ்தாபனம்.

பெரும் முதலீடு செய்யக் கூடியவர்கள் மட்டும் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இலக்கம் 702,
C/o உதயன்,
யாழ்ப்பாணம்.

(53560)

MATHS CENTRE

M. M. V. Road, NELLIADY

A/L 98 DAY CLASS பிரிவு II

பகல் நேர வகுப்புக்களுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்.

எமது வழமையான ஆசிரியர் குழு

★ பொருளியல் - திரு. அன்ரனி
★ அளவையியல் - திரு. பிரபானந்தன்
★ வணிகக்கல்வி - திரு. உதயமோகன்
★ கணக்கியல் - திரு. பிரபாகரன்
★ தமிழ் - திரு கமலரூபன்
★ இந்து நாகரிகம் - செல்வி மாதினி
★ இந்து சமயம் - பிரபல ஆசிரியர்
★ வணிகப்புள்ளி விவரவியல் - திரு. திரிகரன்

ஆரம்பம்: 23 - 02 - 98 A. M. 7-00

அண்மையில் வெளியான பரீட்சைப் பெறுபேறுகளில் மிகவும் திறமையான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்.

நிர்வாகி, ஆசிரியர்கள்.

(சி-2940)

யாழ்ப்பாணம் முத்தமிழ் வெளியீட்டுக் கழகம்

10-02-1998 அன்று நடைபெற்ற ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் பின்வரும் நிர்வாகக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது:

தலைவர்: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
துணைத்தலைவர்கள்: கலாநிதி க. குணராஜா, கவிஞர் சோ. பத்மநாதன்
பொதுச் செயலாளர்: பேராசிரியர் நா. சுப்பிரமணியம்
இணைச்செயலாளர்கள்: திரு. க. கனகசிங்கம், செல்வி வாசுகி சொக்கலிங்கம்
பொருளாளர்: கலாநிதி கா. குகபாலன்

குழு உறுப்பினர்கள்:

1. பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம்
2. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்
3. திரு. ம. இரகுநாதன்
4. திரு. பொ. ஞானதேசிகன்
5. கல்வயல் வே. குமாரசாமி
6. கவிஞர் இ. முருகையன்
7. கலாநிதி எஸ் சிவலிங்கராஜா
8. வித்வான் க. சொக்கலிங்கம்
9. செல்வி செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

(சி/2937)

தொழிற் பயிற்சிகள்

RADIO, T. V AND VIDEO DECK REPAIRING

சகல இன Radio, T. V. Video deck என்பன திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து விளக்கமாக பயிற்சியளிக்கப்படும்.

காலம் 09 மாதம்

MOTOR REWINDING AND ELECTRICAL WIRING

சகல இன Motor, fan, Transfomer என்பன Rewinding செய்யப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து விளக்கமாக பயிற்சியளிக்கப்படும். மற்றும் வீட்டு மின்சார வேலைகள் செய்யப்படும் முறை, மின் உபகரணங்கள் திருத்தப்படும் முறை என்பன பயிற்சியளிக்கப்படும்.

காலம் 06 மாதம்

AIR CONDITION REFRIGERATION

சகல இன குளிர் சாதனங்களும் திருத்தப்படும் முறை ஆரம்பத்தில் இருந்து விரிவாக பயிற்சியளிக்கப்படும்.

காலம் 05 மாதம்

MOTOR MECHANISM

சகல இன நீர்இறைக்கும் இயந்திரம், மோட்டார் சைக்கிள் என்பன திருத்தப்படும் முறை பயிற்சியளிக்கப்படும்.

காலம் 05 மாதம்

ஆரம்பம்:- 27 - 02 - 98 (வெள்ளி),
28 - 02 - 98 (சனி)

குறிப்பு: சனி, ஞாயிறு மாலை நேர வகுப்புகள் தொழில் செய்வோரின் நன்மை கருதி நடைபெறுகின்றன.

விவரங்கள் நேரில்:

JAFFNA TECHNICAL INSTITUTE

[றயில்வே கடவை அருகில்]

52/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (53578)

நீங்கா நினைவில் ஓராண்டு

தோற்றம்: 09 — 10 — 1948

மறைவு: 05 — 03 — 1997

அமரர் சேனாதிராசா இராமநாதன் (மாமா)

நயினாதீவு

திதி: 23 — 02 — 1998

நாடுபோற்ற அன்பை நம்மீது நீ இறைத்து
கூடிவலம் வந்தாயே கூறாமல் சென்று விட்டாய்!
பாடுபட்ட பயனை நீ பாலரிடம் காணுமுன்னே
கூடு விட்டு நீ விரைந்து கூடியதேன் சொர்க்கத்தில்!

பாடு பட்டோம் உன்வாழ்வு பக்குவமாய்
நிலைக்குமென்று
நீடுவாழ உன்நெஞ்சம் நினைக்கவில்லை
தோற்றுவிட்டோம்
வீடு விளங்க நீ வீற்றிருந்த அந்நினைவு
விட்டகலாதென்றும் வீடு பெற அஞ்சலிகள்.

துயரமுடன் நினைவுகூரும்;
மனைவி, மக்கள், உறவினர்கள்.

40, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (53574)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

கூட்டு முயற்சியா?

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம் என்று அரச தரப்பில் வாய் ஓயாது சொற்தாளம் போடப்படுகிறது. ஜனாதிபதி தொடக்கம் சாதாரண கட்சிப் பிரமுகர் வரை பொது மேடைகளிலும், நாடாளுமன்றத்திலும், அறிக்கைகளிலும், கருத்தரங்குகளிலும் தாம் அரசியல் தீர்வுப்பிரியர்களாகவே விளாசித் தள்ளுகின்றனர்.

ஆனால் அரசியல் தீர்வை நாடிய செயற்பாடுகளோ சத்த மந்தம் — ஆமை வேகத்தை விடக் குறைவானது! அரசு தயாரித்த அரசியல் தீர்வு யோசனையை தீர்வுத் திட்டமாக்குவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை உருவாக்கினார்கள். அமைச்சர் பீரிஸின் கணக்கின் படி 77கூட்டங்கள் நடைபெற்றன. எனினும் யோசனையை முழுமையான,ஏகோபித்த திட்டமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியவில்லை!

இனப்பிரச்சினை விவகாரத்தில் ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் ஒரே அணியாகச் செயற்படுவதாக பிரிட்டிஷ் அமைச்சர் முகதாவில் இணக்கம் காணப்பட்டது. ஆனால் அரசியல் தீர்வு காணும் செயற்பாடுகள் எல்லாமே எதிரும் புதிருமாக தாறுமாறாகவே நடந்து வருகின்றன.

அரசாங்கத்தின் யோசனை எனக் கூறி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்வுக்கு மாற்று யோசனை சமர்ப்பிக்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியது. அரசும் ஒப்புக்கொண்டது.

இதனால் அரசின் செயற்பாட்டு அட்டவணையாப்பின் தள்ளும் நிலை ஜனவரி இறுதிக்குள் மாற்று யோசனை கிடைக்காவிடில் அரசு தனது அட்டவணைப்படி தீர்வுத்திட்டத்தை முன்னெடுக்கும்என்று அமைச்சர் பீரிஸ் ஒருமுறை சொன்னார்.

இப்போது முற்றாக மாறிவிட்டார். ஐ.தே.கட்சி தனது மாற்று யோசனையின் இரண்டாம் கட்டத்தை வெளியிடும் வரை—அடுத்தமாதம்வரை—காத்திருக்கப்போகிறது அரசு! மாற்று யோசனையை தமிழ் முஸ்லிம் கட்சிகள் ஏற்கும் பட்சத்தில் அதன் அடிப்படையில் தீர்வைக்கொண்டுவரத் தயார் என்று பீரிஸ் தாராள மனப்பான்மை காட்டுகிறார்.

ஒற்றையாட்சி முறையை மாற்றுவதற்கு ஐ.தே.க, ஒருபோதும்இணங்காது வடக்கு-கிழக்கு இணைந்திருப்பதையும் அது எதிர்க்கும். இதனை நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அவ்வாறிருக்க ஐ. தே. க. மாற்று யோசனை அடிப்படையில் தீர்வு காணத் தயார் என்று கூறுவதன் அர்த்தம்?

அரசு தான்கூறிவந்த பிராந்திய சபை நிர்வாக அலகு முறையிலும், வடக்கு-கிழக்கு இணைந்திருக்கும் அம்சத்திலும் குத்துக்கரணம் அடிக்கத் தயாராகி விட்டது என்பதா?

ஆளும் தரப்பினரும்,எதிர்க் கட்சியினரும் சேர்ந்து தமிழர் தலையில் மிளகாயை அரைக்க கூட்டாகத் தயாராகிறார்களா? தாமதம் தமிழரை ஏமாற்றவா அல்லது அவர்களின் அரசியல்அபிலாஷைக்கு விரோதமான தீர்வைத் திணிக்கவா?

தமிழர்கள் விழிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும். தமிழ்த் தலைவர்கள் நேரத்துக்கு ஏற்ற கதை சொல்லி கைகட்டிப் பின் செல்லாது பார்த்துக் கொள்ள வேண்டும்.

கொலைப் பயமுறுத்தலின் தன்மை
செய்தியாளருக்கு எச்சரிக்கை தகவல்

பிரபல பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் அவரது இல்லத்தில் வைத்து இனந் தெரியாதோரால் கொலைப் பயமுறுத்தலுக்கு ஆளானார். தமக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் குறித்து அவர் ''யுத்திய'' சிங்கள வார இதழுக்கு வழங்கிய பேட்டி இது.

தமிழில்: கஜனி

இக்பால் அத்தாஸ் பேட்டி

கேள்வி: தங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை அச்சுறுத்தல் குறித்து அனைவரும் அறிவர். அந்தச் சம்பவத்தை நீங்கள் எவ்வாறு கருதுகிறீர்கள்?

பதில்: தனிப்பட்ட முறையில் எனக்கு ஏற்பட்ட பாதிப்புகளைக் கவனத்தில் எடுக்கும் போது மேலும் சில விடயங்களை அவதானிக்க முடிகிறது. அதாவது எனக்கு ஏற்படுத்தப்பட்ட பாதிப்பின் மூலம் சிறிலங்காவிலுள்ள செய்தியாளர்களுக்கு ஒரு தகவல்விடுக்கப்பட்டுள்ளது செய்தியாளராகப் பணியாற்றும் ஒருவரின் செய்தியால் தனிப்பட்ட ஒருவருக்கோ அல்லது தனிப்பட்டவர்களுக்கோ ஏதோவிதத்தில் பாதிப்பு ஏற்படுமானால் அது பயங்கரமான விளைவுகளை உருவாக்கும் என்பதே அதுவாகும். அதை வேறுவிதத்தில் கூறுவதானால் நிர்வாக, அரசியல் மட்டங்களில் இடம் பெறும் ஊழல்களை, மோசடிகளை வெளிப்படுத்த முயலும் செய்தியாளர்களின் உயிருக்கு அச்சுறுத்தல் உருவாகக் கூடும்.

கேள்வி: இராணுவச் செய்தியாளர் என்ற வகையில் நீங்கள் நன்கு பிரபலமானவர். தற்போது சிறிலங்காவில் இடம் பெறும் யுத்தத்தை எவ்வாறு நோக்குகிறீர்கள்? இந்த யுத்தம் தொடர்பாக செய்தியாளர் என்ற வகையில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் குறித்து உங்களது அபிப்பிராயம் என்ன?

பதில்: பல ஆண்டுகளாக சிறிலங்காவில் இடம் பெற்று வரும் யுத்தத்தால் அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் பொது மக்களே என்பதுதான் எனது கருத்தாகும் பொதுமக்கள் கொள்வனவு செய்யும் சவர்க்காரம், பிரேட் போன்றசிறிய பொருள்களுக்குக் கூட அவர்களையறியாமல் அறவிடப்படும் வரி யுத்தத்திற்குச் செலவு செய்யப் படுகிறது. செய்தியாளர் என்ற வகையில் யுத்தம் தொடர்பான சரியான கருத்துக்கள் பொதுமக்களுக்குக் கிடைக்கவில்லை என்றே கூறுவேன். சில காலத்திற்கு முன்னர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் யுத்தம் இடம் பெறும் இடங்களுக்குச் சென்று வர ஒழுங்குகள் இருந்தன. தகவல் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பித்தால் பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலைப் பெற்று செய்தியாளர்கள் யுத்த களத்திற்கு சென்றுவர அனுமதிப்பர். அவ்வாறு கிடைக்கும் அனுமதியுடன் யுத்த களத்திற்குசெல்லும் செய்தியாளர்களுக்குத் தெளிவான நிலைமையை அறிந்து கொள்ள முடியும். இருப்பினும் அண்மைக் காலங்களில் செய்தியாளர்களுக்கு அவ்வாறான வாய்ப்புக்கள் அரிதாகவே கிடைக்கின்றன, இவ்வாறான சூழ் நிலையில் செய்தியாளர் ஒருவரால் யுத்தம் தொடர்பான சரியான தகவல்களை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும்? இக்காரணத்தாலேயே சாதாரண மக்களுக்கு யுத்தம் தொடர்பான சரியான தகவல்கள் கிடைப்பதில்லை.

கே: எங்கள் நாட்டில் இடம் பெற்றுவரும் யுத்தம் தொடர்பாகவும் உண்மை நிலை குறித்தும் பொதுமக்களுக்கு சரியான தகவல்கள் கிடைப்பதில்லை என நீங்கள் கருதுகிறீர்களா?

ப: உண்மையில் ஆம் என்றே கூறவேண்டும். போர் முனைச் செய்திகள் எனப் பாதுகாப்பு அமைச்சினால் விடுக்கப்படும் அறிக்கைகளும், விடுதலைப் புலிகளால் விடுக்கப்படும் செய்தி அறிக்கைகளும் மாத்திரமே மக்களுக்கு யுத்தம் தொடர்பாகக் கிடைக்கும் தகவல்கள் ஆகும். இந்தப் பத்திரிகை அறிக்கைகளையும் ஒன்று சேர்த்து எழுதப்படும் செய்திகளாலோ அல்லது இந்த இரண்டு அறிக்கைகளையும் வைத்தோ சரியான தகவல்களை எவ்வாறு பொதுமக்கள் பெற முடியும்? ஆனால் வெளியாகும் செய்திகளை விட பல விடயங்கள் யுத்த களங்களில் இடம்பெறுகின்றன என்பதே எனது கருத்தாகும்.

கே: நீங்கள் எதிர்கொண்ட இந்தச் சம்பவத்திற்கு (கொலை அச்சுறுத்தலுக்கு) நெருங்கிய காரணமாக எவை இருக்கக் கூடும் எனக் கருதுகிறீர்கள்?

ப: சீருடை அணிந்த மற்றும் சீருடை அணியாத சிலர் இந்த நாட்டில் இடம்பெறும் யுத்தத்தைப் பயன்படுத்தி எப்படிப் பணக்காரர்கள் ஆனார்கள் என்பது குறித்து கடந்த காலங்களில் நான் கவனம் செலுத்தினேன்.

யுத்தத்தின் பேரால் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஊழல்கள் மற்றும் மோசடிகள் பலவற்றை நான் வெளிப்படுத்தினேன். அதேபோல் விமானப்படையால் கடந்த காலங்களில் கொள்வனவு செய்யப்பட்ட சில ஆயுதங்கள் குறித்தும் வான்கலன்கள் குறித்தும் நான் தகவல்களை வெளியிட்டிருந்தேன். எனக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலுக்கும் இவற்றுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருக்கலாம் எனக் கருதுகிறேன்.

கடந்த ஜூலை மாதத்தில் எனது வீட்டருகே இனந்தெரியாதோரின் நடமாட்டங்கள் இருந்தன. அது குறித்து பொலீசாரிடம் முறைப்பாடு செய்திருந்தேன். எனது வீட்டருகே நடமாடியவர்கள் விமானப்படையைச் சேர்ந்தவர்களும் சி. ஐ.டியினருமே என்பது பொலீசாரின் விசாரணைகளில் இருந்தும் வேறு வழிகளாலும் நிரூபணமானது.

வீட்டில்பயங்கரவாதியாம்

கே: கொலை அச்சுறுத்தலுக்கு மேலதிகமாக தங்களது தனிப்பட்ட நடத்தை குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது என நீங்கள் தெரிவித்திருந்தீர்கள். அதுபற்றி சிறிது விளக்கமுடியுமா?

ப: ஆம் எனது வீட்டில் பயங்கரவாதி ஒருவர் தங்கியிருக்கிறார் என அவர்கள் பிரசாரம் செய்தனர். அதேபோல் வேறு சில சமூகவிரோதச் செயல்கள் எனது வீட்டில் இடம்பெறுவதாகவும் பிரசாரம் செய்தனர். இவற்றால் பயன் ஏதும் ஏற்படாத நிலையில் செல்வநாதன் என்பவருக்கு விசேட பயிற்சி அளித்து அவர் மூலமாக விடுதலைப் புலிகளுக்கு நான் உதவி செய்வதாக பிரசாரம் செய்வதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இருப்பினும் அதுவும் கூடவில்லை.

இராணுவத்தில் அனைத்து அதிகாரிகளும் நேர்மையற்றவர்கள் அல்லர். இராணுவத்திலுள்ள நேர்மையான அதிகாரிகள் அது குறித்து காலநேரத்துடன் எனக்குத் தெரிவித்ததால் அந்த முயற்சியும் சாத்திய மற்றதாகி விட்டது. இவ்வாறு பொய்யான பிரசாரங்களை மேற்கொள்ள சிலர் முயன்று வருவதாக நாங்கள் பத்திரிகைகளில் வெளியிட்ட காரணத்தினால் அவர்களது முயற்சிகள் பிசுபிசுத்து விட்டன.

அந்த முயற்சிகளின் பின்னணியில் நாட்டின் பிரபல அமைச்சர் பதவியை வகிக்கும் அமைச்சர் ஒருவர் செயற்பட்டார். எனக்கு எதிராக இவ்வளவு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட போதிலும் ஒரு நாளாவது என்னிடம் அவை குறித்து கேள்வி எழுப்பப்படவில்லை என்பது நகைப்புக்குரியது. நான் விடுதலைப் புலிகளுக்குத் தகவல்களை வழங்குகிறேன்எனச் சந்தேகித்தால் ஏன் அவர்கள் என்னை விசாரிக்ககூட முயற்சி எடுக்கவில்லை. எனது முயற்சிகளைத் தடுப்பதற்கு எடுக்கப்பட்ட பிரசார முயற்சிகளே அவை என்பது தெளிவாகிறது.

கே: போர் முனைகளில் இருந்து போர் தொடர்பான செய்திகளை அனுப்பும் செய்தியாளர் என்ற வகையில் யுத்தம் தொடர்பாக நீங்கள் வெளிக்கொணர்ந்த தகவல்களில் மிக முக்கியமானது என எதைக் கருதுகிறீர்கள்

ப: நான் பல்வேறு தகவல்களை வெளியிட்டுள்ளேன். அண்மையில் நான் வெளியிட்ட முக்கிய தகவலாக அரசால் கொள்வனவு செய்யப்பட்ட 32 ஆயிரத்து 400 மோட்டார் ஷெல்கள் தொடர்பான சம்பவத்தைக் கூறலாம். சிம்பாப்வே நாட்டிலிருந்து 32 ஆயிரத்து 400 மோட்டார் ஷெல்களை அரசு தருவிக்கிறது என முதன் முதலில் வெளியிட்டபோது அதில் உண்மையில்லை என அரசு தெரிவித்தது. ஆனால் அது உண்மையானது என்பதையும் அவ்வாறே மோட்டார்களை அரசு பெற முற்பட்டது என்பதையும் பின்னர் நான் நிரூபித்தேன்.

கே: தங்களுக்கு நேர்ந்துள்ள இந்த அச்சுறுத்தலை சுதந்திரப் பத்திரிகையாளர்களின் செயற்பாடுகள் என்ற கோணத்திலிருந்து பார்க்கும் போது எவ்வாறு விளங்கிக் கொள்கிறீர்கள்

ப: நாங்கள் பத்திரிகையாளர்களாகப் பணியாற்ற வேண்டுமாயின் அதிகாரத்தில் இருப்பவர்களின் துர் நடவடிக்கைகளைக் கண்டும் காணாதது போல் செயற்பட வேண்டும் என சில அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள். ''இவ்வாறான சூழ் நிலையில் இவ்வாறான செய்திகள் எழுதினால் சாதாரணமாக இவ்வாறான சம்பவங்களை எதிர் நோக்க வேண்டியே ஏற்படும்'' என எனது கொலை அச்சுறுத்தல் குறித்துக் கருத்துவெளியிட்ட அரசியல் வாதி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். அதை சற்றுக் கொச்சையாகக் கூறுவதாயின் 'உந்தமாதிரி விசயங்களை எழுதாமல் இரும் கோடா'' என்பதாகும். ★

ஆய்வுநூல்களை வெளியிட ஆர்வலர் ஒத்துழைப்புத் தேவை

முத்தமிழ் வெளியீட்டுக்கழகம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், பெப். 23

தமிழின் கலை, இலக்கியம், இறைநெறி, அறிவியல் முதலிய துறைகளிலே ஆய்வு நூல்களை இங்கு வெளியிடுவது அவசியத்தேவையாகும். இத்தேவையை நிறைவு செய்யும் பொருட்டே யாழ்ப்பாணத்தில் முத்தமிழ் வெளியீட்டுக்கழகம் தொடங்கப்பட்டது-

பல்கலைக்கழக முகாமைத்துவ மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் மீளமைப்புக் கூட்ட வைபவத்தில் தலைமை வகித்த கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

1977 இல் ஆரம்பிக்கப்பட்ட முத்தமிழ் வெளியீட்டுக்கழகம் 1985 வரை எட்டு ஆய்வு நூல்களை வெளிக்கொணர்ந்தது.

நாட்டின் அமைதியின்மை, போர் முதலிய நெருக்கடிகளினால் தடைப்பட்ட இக்கழகத்தின் செயற்பாட்டிற்கு 1990 இல் மீண்டும் புத்துயிரளிக்க எடுத்த முயற்சியும் தடைப்பட்டது.

எனினும் மீண்டும் இங்கு கூடியுள்ள அறிஞர்கள், ஆர்வலர்களின் ஒத்துழைப்பும் முன்னெடுப்பும் எதிர்காலத்தில் பயனுள்ள ஆய்வுநூல்கள் பல வெளியாக உதவும் என்பது எனது உறுதியான நம்பிக்கை — என்றார்.

இக் கூட்டத்தில் பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம், கலாநிதி க. குணராஜா, [illegible] உட்படப் பலரும் உரையாற்றினார்கள்.

(அ-8)

சீனி தட்டுப்பாடு

வடமராட்சி, பெப். 23

வடமராட்சிப் பிரதேசத்தில் சீனிக்கு பெருந் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தனியார் கடைகளில் இதனைப் பெறமுடியாதுள்ளது.

(ஐ-173)

நாளை

மாசி 12

செவ்வாய்க்கிழமை

திதி: திரயோதசி பின் இரவு 03.38 வரை

நட்சத்திரம்: உத்தராடம் பிற்பகல் 1.11 வரை.

பிரதோஷவிரதம்

சுபநேரம்: 11.00-12.20

ராகுகாலம்: 3.30-5.00

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான முறையில்
குறைந்த கட்டணத்தில்
★ போட்டோபிரதிகள்
★ லமினேட்டிங்
(கவரிடுதல்)

நாடவேண்டிய இடம்:

அருண்

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

COMPUTER POINT

(COMPUTER TRAINING DIVISION)

REGD No. J/DS/BR/63/97

No. 28, St. Patrick's Road, Jaffna.

COMPUTER COURSES

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

98-02-28, 98-03-01, 98-03-02

LECTURES By:

S. R. LOGENDRA (D C. A.)
(Systems Analyst M. C. S. India)

★ G C E O/L, A/L மாணவர்கள், பல்கலைக் கழக மாணவர்கள், தொழில் புரிவோர் ஆகியோருக்கான பிரத்தியேக வகுப்புகள் கூடிய செய்முறைப் பயிற்சிகளுடன் நடைபெறும்.

★ வார நாள்களிலும், சனி, ஞாயிறு நாள்களிலும் வகுப்புகள் நடைபெறும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

— நிர்வாகி

(53550)

5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில்
பரீட்சைக்குத் தோற்றிச்
சித்தியடைந்ததின் மூலம்

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின்

புகழை நிறுவியவர்கள்

1995 விசேட பரீட்சை	1997 பரீட்சை
1. து. தூஷயந்தன்	1. இ. மயூரன்
2. ம. உஷாதேவி	2. நே. மயூரி
3. க. தாட்சாயினி	3. கு. சஜீதா
4. கு. அர்ச்சனா	4. ம. அனோஜா
5. ஸ்ரீ. ஐங்கரன்	5. உ. கயிலன்
6. அ. யசோதா	6. த. வாசுகி
7. சி. தஷிதரா	7. இ. வினோதினி
8. கி. ஜெனார்த்தனி	8. ஸ. பகீதரன்

சித்தியடைந்த மாணவர்களையும், அதிபரையும், கற்பித்த ஆசிரியர்களையும், ஏனைய ஆசிரியர்களையும் பாராட்டுகின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

சைவத்தமிழ் வித்தியாலயம்,
உரும்பிராய்.

[53565]

கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கப்பணியாளர்

திரு. நெ. ஜோ. குணராசா

அவர்களின் தந்தையார்

திரு. ஸ்ரனிஸ்லஸ் நெவின்ஸ்

[முன்னாள் கூட்டுறவுப் பரிசோதகர்]

அவர்கள் 16-02-98 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொது முகாமையாளர்,
தலைவர், நெறியாளர் குழு,
யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,
யாழ். பட்டணக் கிளை.

[53557]

பால் கல்வி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப். 23
யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் வெளியீடான கலாநிதி சபா. ஜெயராசா எழுதிய பாலர் கல்வி நூல் வெளியீட்டு விழா புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கி. தனபாலன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை கலந்து கொள்வார்.

அறிமுக உரையை தென்னிந்திய திருச்சபை பேராயர் அதிவண. சு. ஜெபநேசன் அடிகளாரும், நூல் ஆய்வுரையை 'யுனெஸ்கோ' கல்வி இணைப்பாளர் கோ. வேலாயுதமும், கருத்துரைகளை யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் க. பரமநாதனும், கலாநிதி எஸ். சிவலிங்கராசாவும் நிகழ்த்தவுள்ளனர். (ஜ-5)

செயலகத்தால் பராமரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 23
கடலில் கைதாகி யாழ். மாவட்ட நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்ட 56 பேரையும் யாழ் செயலகம் பொறுப்பேற்று பராமரித்து வருகின்றது.

வன்னிப் பகுதியைச் சேர்ந்த இவர்களில் பலருக்கு விசேட அடையாள அட்டை பெற்றுக் கொடுத்து சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கைகளையும் யாழ். செயலகம் மேற்கொண்டு வருகிறது.

[ஜ-5]

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
இலங்கை

சிறியரக உழவு யந்திரத்துக்கான பெட்டி வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு சிறியரக உழவு யந்திரத்துக்கான (Land Master) பெட்டி வழங்குவதற்கான கேள்விப் பத்திரம் கோரப்படுகிறது.

1. கேள்விப்பத்திரதாரர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் பொறியியலாளர் அவர்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

2. கேள்விப்பத்திரதாரர் மீளளிக்காத வைப்புப் பணமாக 250 ரூபாவையும் மீளளிக்கும் வைப்புப்பணமாக ரூபா 750 ஐயும் செலுத்தி அதற்கான பற்றுச் சீட்டுடன் கேள்விப் பத்திரங்களை 10-03-1998 காலை 10.00 மணிக்கு முன்னர் உதவி நிதியாளர் (வழங்கல்) அறையிலுள்ள கேள்விப் பத்திரப்பெட்டியில் தபால் மூலமோ / நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் அன்றைய தினம் காலை 10.30 மணிக்குத் திறக்கப்படும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் UJ/PO/05/98 என குறிப்பிடவேண்டும்.

பதிவாளர்
யாழ். பல்கலைக்கழகம்
(இ/2936)

யா/ சங்கானை சிவப்பிரகாச ம.வி.
பழைய மாணவர் சங்கம் நடத்தும்
சிவராத்திரி தின

மாபெரும் கரப்பந்தாட்டப் போட்டி

அணிகள்
(1) ஆவரங்கால் மத்திய வி. கழகம் எதிர் K K.S ஐக்கிய வி.க.
(2) யாழ். பல்லைக்கழகம் எதிர் K.K.S "B" அணி

இடம்:- யா/ சங்கானை
சிவப்பிரகாச ம. வி. மைதானம்

காலம்:- 25-02-98 (புதன்)
மாலை 3-00 மணி (புதிய)

அனுபவ நுட்பம் அறிய பாடசாலை மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு.

விளம்பர அனுபளிப்பு:-

ஆசைப்பிள்ளை & சன்ஸ் நகையகம்

அழகுக்கு அழகு செய்யும், தங்கரை நகைகளை யாழ். நகர் செலோது பெற்றுக் கொள்ள சிறந்த ஸ்தாபனம்.

"திருமகள் வாசம்"

நிகரை வீதி, (53579) சங்கானை.

சேவைநலம் பாராட்டு

யா/ சுன்னாகம்
நாகேஸ்வரி வித்தியாசாலையில்
25 ஆண்டுகள் தனது உன்னத சேவையை ஆற்றிய
ஆசிரியப் பெருந்தகை

திருமதி செ. நடேசர் (செல்லக்கா)

அவர்களை வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

(53569) நலன் விரும்பிகள்

ஓ
சர்வம் சிவமயம்

சீட்டிழுப்பு

ஓமந்தை
ஸ்ரீமருதோடைக் கந்தசுவாமி கோயில்

திருப்பணிக்காக குலுக்கப்பட்ட சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற பரிசில்களுக்கு உரியவர்கள், பரிசைப் பெறத் தவறியவர்கள் வெற்றி பெற்ற சீட்டுக்களுடன் 28-02-98 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளவும்.

01-03-98 தொடக்கம் மேற்படி பொருள்கள் எம்பெருமான் திருப்பணி நிதியில் சேர்க்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

நன்றி.

இறைபணியிலுள்ள
(சி-1946) தேவஸ்தானம்.

விராட் விஷ்வ பிரமனே நம

31 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 07 — 12 — 1963

உதிர்வு: 24 — 01 — 1998

செல்வன் கந்தசாமி கணேசலிங்கம்

நேரிசை வெண்பா

மன்னுமுய ரீசரதே மாண்புமிகு தைமாசத்
துன்னு மபரத்தை காதகிநாள் — பன்னவரும்
செம்மல் கணேசலிங்கம் செற்தொடையாள் காளிபதம்
நம்பி நடந்தாள் நவில்.

சொல்லவரு முப்பத் தொருநாளில் எத்துயரம்
நில்லா தொழியுமோ நீணிலத்தில் — எல்லவரும்
ஏத்துங் கணேசலிங்கா என்றென்றும் நின்நினைவே
வாழ்த்தி யருளுமெம் வாய்.

இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் பலவழிகளில் உதவி புரிந்தோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் துயருறும்:
தாய், சகோதரர்கள், மைத்துனர்கள்,
மருமக்கள், பேராக்கள்.

மெக்கானிக் முருகையா,
காளிகோயிலடி, வட்டு. தெற்கு,
வட்டுக்கோட்டை.

(53580)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 அப்பாவித் தமிழரைப் பலி கொண்ட

தம்பலகமம் தாக்குதல் உள்வீட்டு வேலையா?

கொழும்பு, பெப். 23

தம்பலகமம் பாரதிபுரத்திலுள்ள பொலீஸ் காவல் நிலையம் மீது அங்கு பணியாற்றிய பொலீஸாரே தாக்குதலை மேற்கொண்டனர் எனத் தெரியவந்துள்ளதாகக் கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களைத் தடுப்பதற்காக அரசால் வழங்கப்படும் சன்மானத்தையும் பதவி உயர்வுகளையும் பெறும் நோக்கில் போலியான தாக்குதல் ஒன்றுக்குத் திட்டமிடப்பட்டது எனத் தெரியவந்துள்ளது என மூத்த பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்று கூறப்படுகிறது.

அங்கு கிடமையாற்றிய பொலீஸார் இரு குழுக்களாகப் பிரிந்து பொலீஸ் காவல் நிலைகள் மீது தாக்குதலை நடத்திய பின்னர் அந்த ஊரிலுள்ள 8 அப்பாவிக் கிராமவாசிகளைப் படுகொலை செய்து விட்டு அவர்களைப் புலிகள் எனத் தெரிவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன எனவும்—

அந்தத் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் ரவைகள் மற்றும் வெடி மருந்துகளின் ஒரு பகுதி விடுதலைப் புலிகளுக்கு விற்கப்படுவதற்காக மறைத்து வைக்கப்பட்டது எனவும்— நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிப்பதாக அப்பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின்போது பொலீஸாரினால் ரி- 56 ரக துப்பாக்கிகளுக்குரிய ரவைகள்— 36 ஆயிரத்து 607.

மோட்டார் ஷெல்கள் — 120

எல். எம். ஜி. ரவைகள் — 2 ஆயிரத்து 295.

கைக்குண்டுகள் — 126.

றிவோல்வர் ரவைகள்— 90

40 மி. மீ. கிரனைட்டுகள் — 80.

கிளைமோர் குண்டுகள் — நான்கு.

பரா வெளிச்சக் குண்டுகள் — 4 ஆகியன பயன்படுத்தப்பட்டதாகக் கணக்குக் காண்பிக்கப்பட்டுள்ளது.

படுகொலை செய்யப்பட்ட அந்த 8 தமிழ் இளைஞர்களும் யுத்தத்துடன் தொடர்பற்றவர்கள் எனவும் அவர்கள் கிராமத்திலிருந்து கடத்தி வரப்பட்டு மிகக் குறுகிய தூரத்தில் வைத்தே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிய வந்துள்ளது.

ஒரு மூத்த பொலீஸ் அதிகாரியின் அனுசரணையுடனும் பணிப்பின் பேரிலுமேயே இந்தப் போலித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது எனவும் கூறப்படுகிறது. (இ-10)

அரச சார்பற்ற நிறுவனங்களின்

வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இவ்வாரம் யாழ். விஜயம்

வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களின் உயர் அதிகாரிகள் பலர் இவ்வாரம் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்ளவுள்ளனர்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், ஐ. நா. அபிவிருத்தி திட்டம், ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் போன்றவற்றின் அதிகாரிகளே யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளனர். தமது நிறுவனங்களினால் இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டங்களை மதிப்பீடு செய்வதுடன் புதிய வேலைத்திட்டங்கள் பற்றிய முடிவுகளை மேற்கொள்ளும் பொருட்டுமே இவர்கள் விஜயம் மேற்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் போது யாழ். அரச அதிபர் உட்பட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள். [ஐ-5]

மெய்வல்லுநர் போட்டிகள்

வலிகாமம், தெற்கு பெப். 23

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் ஆனந்தி சிவஞான சுந்தரம் தலைமையில் நடைபெறும்.

வைத்தியகலாநிதி ஜெயந்தி தேவி சேனாதிராசா பிரதம விருந்தினராகவும், உடுவில் கோட்டக்கல்வி அதிகாரி அ. தற்பரானந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (ஐ-152)

★ ★ ★

உடுவில் அமெரிக்க மிஷின் தமிழ்க்கலவன் பாடசாலை இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் சி. லோகேஸ்வரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

உடுவில் கல்விக்கோட்ட அதிகாரி அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகவும், உடுவில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் தி. தியாகச் சந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ஐ-152)

★ ★ ★

மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தின் மெய்வல்லுநர் போட்டி இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு வித்தியாலய அதிபர் திருமதி ர. சோதிலிங்கம் தலைமையில் வித்தியாலய முன்றலில் நடைபெறும். பிரதம விருந்தினராக இ. த. விக்கினராசா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினராக ஆ. வ. கணேசலிங்கம் கலந்து கொள்வார். (ஐ-28)

★ ★ ★

யாழ். சம்பத்தரிசியார் கல்லூரியின் இல்லமெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது யாழ்ப்பாணம் வர்த்தக வங்கி முகாமையாளர் எஸ். பி. ரஜீவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

★ ★ ★

யாழ். அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பி. ப. 2 30 மணிக்கு அரியாலை மத்திய விளையாட்டுக்கழக மைதானத்தில் வித்தியாசாலை அதிபர் பொ. நடராசா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ். ரி. பத்மநாதனும், சிறப்பு விருந்தினராக கல்விக்கோட்ட அலுவலக உதவியாளர் செ. மெற்றாஸ்மயில் ஆகியோரும் கலந்து கொள்வார். (ஐ-30)

கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்

திரு. பா. சயந்தன்

அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர் கந்தையா பாலச்சந்திரன்

(முன்னாள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)

அவர்கள் 18-02-98 அன்று காலமானார். அவரது திடீர் மறைவால் துன்பக்கடலால் சூழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்,
நலன்புரிச் சங்கம்,
யாழ். பல்கலைக் கழக

(53587)

ஈ. பி. டி. பி. அலுவலகம் மீதான தாக்குதல்:

விசாரணையின் பின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைப்பு

திருகோணமலை, பெப். 23

திருகோணமலை மத்திய வீதியில் உள்ள ஈ. பி. டி. பி. அமைப்பின் அலுவலகம் மீது நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதலில் உயிரிழந்த மாணவன் அனெஸ்லியின் சடலம் அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவரின் மரணம் குறித்து பதில் நீதிவான் எம். கே. செல்வராசா நேற்று திருகோணமலை வைத்தியசாலையில் மரண விசாரணைகளை நடத்தினார்.

பலரின் சாட்சியங்களைப் பதிவுசெய்த பின்னர் மரண விசாரணையை நாளை வரை ஒத்திவைத்த பதில் நீதிவான் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்.

அதே நேரம் — சம்பவம் நடந்த பகுதியை நேற்றுச் சுற்றிளளைத்துத் தேடுதல் நடத்திய படையினர் அப்பகுதியில் உள்ள இடிந்த கட்டடம் ஒன்றில் இருந்து கைக்குண்டு ஒன்றையும், ஹெல்மட் ஒன்றையும் கைப்பற்றினர். (இ-3)

மலத்தியோன் வருகிறது

திருநெல்வேலி, பெப். 23

யாழ். சுகாதார திணைக்கள மலேரியா தடுப்பு பிரிவுக்கு நூறு பெட்டி மலத்தியோன் நாளை செவ்வாய்க்கிழமை இங்கு வந்து சேரவிருக்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பல் மூலம் கொழும்பிலிருந்து கொண்டு வரப்படவுள்ளது. (ஐ-135)

ஆண்டு விழா

திருநெல்வேலி, பெப். 23

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ சற்பக விநாயகர் ஆலய சைவசமய அபிவிருத்தி கழகத்தின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், மகா சிவராத்திரி விழாவும் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. இவ்விழாவில் பிரதம அதிதியாக பலாலி ஆசிரியர்பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கம் கலந்துகொண்டு சைவசமய அறிவுப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்குவார். நான்கு சாமப் பூசை, கதாப்பிரசங்கம், பண்ணிசை என்பன இரவு ஒன்பது மணி வரை நடைபெறவுள்ளன. (ஐ-35)

தட்டிவான் சேவை தடை

பருத்தித்துறையில் இருந்து நாகர்கோயில் வரை நடைபெற்று வந்த தட்டிவான் சேவை கடந்த 18 ஆம் திகதி குடத்தனையில் இடம்பெற்ற மோதலின் பின்னர் தடைப்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். (ஐ-36)

6 பொத்தியுடன் அதிசய வாழைக்குலை

தென்மராட்சி, பெப். 23

கொடிகாமம் மந்துவில் பகுதியில் உள்ள வாழைத் தோட்டத்தில் ஆறு பொத்திகளுடன் கூடிய வாழைக்குலை ஒன்று காணப்படுகிறது.

ஆரம்பத்தில் ஒரு பொத்தி வெளியே வந்து வாழைச்சீப்புகள் வந்த பின்னர் ஒரு பொத்தியில் இருந்து ஆறு சிறு சிறு பொத்திகள் வெளிவந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த அருளானந்தசிவம் என்பவரின் தோட்டத்திலேயே இந்த அதிசய வாழைக்குலை காணப்படுகிறது.

இதேவேளை இன்னொரு தோட்டத்தில் நான்கு பொத்திகளுடன் கூடிய வாழைக்குலை ஒன்றும் காணப்பட்டது. (ஐ-117)

அரசின் இனப்பிரச்சினை தீர்வுத்திட்டம்

வெளிநாடுகளைக் கொண்டு ஐ. தே. கட்சிக்கு அழுத்தம்

கொழும்பு, பெப் 23

இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ள அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக உடன்பாட்டுக்கு வரும் சந்தர்ப்பங்களில் ஐ. தே. கட்சி கடைப்பிடித்து வரும் நழுவல் போக்குக் குறித்து வெளிநாடுகளுக்கு எடுத்து விளக்கி அரசுக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு அந்த நாடுகளைக்கொண்டு ஐ. தே. கட்சிக்கு அழுத்தம் கொடுப்பது என அரசு தீர்மானித்துள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கிறது.

இந்த முடிவை செயற்படுத்துவதற்கான பொறுப்பு நீதி அரசமைப்பு விவகார அமைச்சிடமும், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சிடமும் கையளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்பு சீர்திருத்தத்துக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு வெளிநாடுகளின் தூதுவர்கள் மூலமாக ஐ. தே. கட்சிக்கு அழுத்தம் கொடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் அரசுக்கும் ஐ. தே. கட்சிக்கும் இடையில் பொது உடன் பாட்வட நாடாளுமன்றத்தில் காணும் நோக்குடன் நாடாளுமன்றச் சபாநாயகர் கே. பி. இரத்னாயகாவைப் பயன்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (இ-10)

கண்காட்சி

யாழ்ப்பாணம், பெப். 23

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் வெகு விரைவில் மாபெரும் கல்விக் கண்காட்சி ஒன்று நடைபெற உள்ளது.

இதற்கான முன் நடவடிக்கைகளை கல்லூரி நிர்வாகம் மேற்கொண்டுள்ளது (ஐ-15)

பேசாலையில் தேடுதல்

கொழும்பு, பெப் 23

மன்னார் மாவட்டம்பேசாலையில் தேடுதல் நடத்திய படையினர் ரி- 56 ரக துப்பாக்கி 1, 33 படகு மோட்டார் இயந்திரங்கள், சேதமடைந்த நிலையில் இருந்த ரொயோட்டா வான் ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளனர் என்று படையினர் தரப்பு அறிவித்துள்ளது. (இ-9)

நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் முன்னாள் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா ஞாபகார்த்த மலர் அறிமுகவிழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் அதிபர் க. சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் நூல் அறிமுக வுரையை திருமதி சி. சுந்தர மூர்த்தி நிகழ்த்தவுள்ளார். (ஐ-8)

காய்ச்சலால் கர்ப்பிணி மரணம்

காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட நிலையில் கடந்த 11 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டமூன்று மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர் சிகிச்சை பலனளிக்காது நேற்று அங்கு மரணமானார்.

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஆறுமுகராசா ஜெயமாலா (வயது 35) என்பவரே உயிரிழந்தவராவார்.

காய்ச்சல் உக்கிரமடைந்து அதிதீவிரசிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட் படுத்திய நிலையிலேயே செப்ரிசீமியாவின் தாக்கத்திற்குள்ளாகி மரணமானதாக வைத்திய அறிக்கையின்படி தெரியவருகிறது. (ஐ-15-189)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தலதா மாளிகை குண்டு வெடிப்பு
முக்கிய சந்தேகநபர் விசாரணையில்

கொழும்பு, பெப். 23

கண்டி தலதா மாளிகை குண்டு வெடிப்புத் தொடர்பாக மேலும் புதிய பல தகவல்கள் வெளியாகியுள்ளன. முக்கிய சந்தேக நபர் எனக் கருதப்படும் முத்துச் சாமிப் பிள்ளை தர்மவிங்கப் விசாரணைக்கு உள்ளாகி வருகின்றார்.

மற்றுமொரு சந்தேக நபரான ரவீந்திரனும் மனைவி கமலாதேவியும் தலைமறைவாகிவிட்டார்கள் என்றும்—

கமலாதேவி திருகோணமலையில் அரச கலுவலகம் ஒன்றில் பணியாற்றியவர் என்றும்—

இந்த மூன்று சந்தேக நபர்களுமே குண்டு பொருத்தப்பட்ட மொறியை கண்டிக்குக் கொண்டு சென்று தற்கொலைப் படையாளிகளிடம் கையளித்தார்கள் எனவும் கூறப்படுகிறது.

இவர்கள் கட்டைப்பறிச்சான், கண்டி ஆகிய இடங்களில் உள்ள சோதனை நிலையங்களில் பொலீஸாரையும் இராணுவத்தினரையும் சமாளித்துவிட்டு கண்டி நகருக்குள் பிரவேசித்துள்ளார்கள். இவர்கள் தேங்காய் வியாபாரிகள் போல நடித்தார்கள் என்றும் கூறப்படுகின்றது. (இ-9-21)

ரூபா 70 கோடி செலவில் யாழ். பொது நூலகம்

கொழும்பு, பெப். 23

16 ஆண்டுகளுக்கு முன்னர் எரிக்கப்பட்ட யாழ் பொது நூலகம் 70 கோடிரூபா செலவில் நிர்மாணிக்கப்பட உள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்று யாழ் பொது நூலக பணிப்புரைக் குழு உறுப்பினரும், யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபருமான யோகேந்திரா துரைசாமி தெரிவித்தார்.

இந்த நூலகத்தை நிர்மாணிப்பதற்கான வரை படங்கள் இந்தியக் கட்டடக்கலை நிபுணர்களின் உதவியுடன் தயாரிக்கப்படுகின்றன. பாரம்பரிய இந்தியக் கலை நுட்பத்துடன் இந்த நூலகம் அமைக்கப்படும். இந்த நூலகத்தை அமைப்பதில் ஜனாதிபதி அதிக அக்கறை கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

கைதானோர் காணாமற்போனோர்:
ஆணைக்குழுவில் பதவி வகிக்க ஐவர் தெரிவு செய்யப்பட்டனர்

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைதானோர், காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்படவுள்ள ஆணைக்குழுவில் அங்கம் வகிப்பதற்காக யாழ். மாவட்டத்தில் இருந்து ஐவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு பொஸ்கோ இன்ஸ்ரிரியூட்டில் நடைபெற்ற கைதானோர் காணாமற் போனோர் யாதுகாவலர் சங்கக் கூட்டத்திலேயே இவர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

இச் சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அனைவரும் கொழும்பு சென்று ஜனாதிபதியுடன் பேச்சு நடத்திய போதே ஜனாதிபதி இவ்வாறு உறுப்பினர்களை தெரிவுசெய்யுமாறு கேட்டிருந்தார். அவரின் கோரிக்கையின் அடிப்படையிலேயே இவர்கள் ஐவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

பதில் நீதிவான் க. கேசவன், சைவக் குருமார் ஒன்றியத் தலைவர் மகேஸ்வரக் குருக்கள், கிறீஸ்தவ பாதிரியார் ஆர். சூசைநாதன், அரசசார்பற்ற நிறுவன ஒன்றியத் தலைவர் எஸ் பரமநாதன், வடமாகாண அரசாங்க ஓய்வூதிய சங்கத் தலைவர் வி. எஸ். இராமநாதர் ஆகியோரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் ஆலோசனைக் குழுவுக்கென ஆறுபேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். செ. ஜெயபாலசிங்கம், க. நடராசா, சு. சிவசம்பு, வி. தங்கராசா, எஸ். தேவராசா, மு. கதிரேசபிள்ளை ஆகியோரே இந்த ஆறுபேரும் ஆவர். (இ-9-15)

மாகாண சபைகளை கலைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சிக்கு அழுத்தம்

கொழும்பு, பெப். 23

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அதிகாரத்தின் கீழ் உள்ள இரு மாகாணசபைகளையும் உரிய காலத்துக்கு முன்னர் கலைப்பதற்குப் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தயாராக உள்ளதாக ஐ. தே. கட்சியின் நிர்வாகத்தின் கீழ் உள்ள வடக்கு – கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாண சபைகளையும் கலைக்குமாறு ஐ தே. கட்சிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக பொதுமக்கள் கருத்துக் கணிப்பை மேற்கொள்ளுவதற்கு முன்னர் மாகாணசபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதே மிகவும் பொருத்தமானது என பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த பலமுக்கியஸ்தர்கள் கருதுவதாலேயே இவ்வாறு ஐ. தே. கவுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது.

தற்போதைய மாகாண சபைகளின் ஆயுள்காலம் எதிர்வரும் ஒக்ஸ்ட் மாதத்துடன் முடிவடைகிறது. இருப்பினும் அச்சபைகளை நேரகாலத்துடன் கலைக்கும் அதிகாரம் முதலமைச்சர்களுக்கு உண்டு. (இ.10)

புலிகள் தாக்கல் செய்த மனு: அமெ. அவகாசம் கேட்கிறது

கொழும்பு, பெப். 23

பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் விடுதலைப் புலிகள் அமைப்பையும் சேர்த்தமை மறு பரிசீலனை செய்யுமாறு கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பு தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போது அமெரிக்க வெளிவிவகார அமைச்சு கால அவகாசம் கோரியுள்ளது.

விடுதலைப்புலிகளின் மனு மீது அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின்போது, விடுதலைப் புலிகள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ராம் சேக்ளார் வாதிட்டார்.

அமெரிக்க அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம், எல்லோருக்கும் தவக்கனை அறியும் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி விடுதலைப்புலிகளை பயங்கரவாத அமைப்புப் பட்டியலில் சேர்த்தமைக்கான ஆவணங்களைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்தார்.

இது தொடர்பான ஆவணங்கள் இருவகையானவை. ஒன்று பார்க்கக்கூடிய ஆவணங்கள், மற்றவை இரகசியமான ஆவணங்கள்.

ஆகவே இவை தொடர்பான பதிலை வழங்க கால அவகாசம் வழங்கவேண்டும்— என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சு கேட்டுள்ளது.

அதன்படி கால அவகாசம் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ளது. (இ-8)

வீசப்பட்ட கைக்குண்டுகளில் ஒன்று வெடிக்கவில்லை

திருகோணமலை, பெப். 23

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் சரமாரியாகத் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். பின்னர் சைக்கிளில் வந்த இருவர் இரு கைக்குண்டுகளை வீசினர். அதில் ஒன்று வெடித்தது, மற்றது வெடிக்கவில்லை.

ஈ. பி. டி. பி. அமைப்பின் திருமலைப் பொறுப்பாளர் சிலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருமலை ஈ பி. டி. பி. அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக விவரிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது அலுவலகம் மீது சரமாரியாக துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டபோது நான் அலுவலகத்துக்கு முன்பக்கம் சென்றேன். அலுவலக காவலரணில் இருந்தவர் முன்னே செல்ல வேண்டாம் என்று என்னிடம் கூறினார்.

அச்சமயம் சைக்கிளில் சென்ற இருவர் கைக்குண்டை வீசிவிட்டு ஓடினர்—என்றார். (இ-3)

விபூதி திருநாள்

யாழ். மறை மாவட்டத்தில் உள்ள சகல கத்தோலிக்க தேவாலயங்களிலும் எதிர்வரும் புதன்கிழமை தவக்காலத்தின் ஆரம்ப தினமான விபூதித் திருநாள் நடைபெற உள்ளது. (ஐ-30)

சர்வஜன...

(முதலாம் பக்கத் தொடர்)

வாக்கெடுப்பை நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவரை மேற்கோள்காட்டி கொழும்பு செய்தி ஏஜென்சி ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

கடந்த 13ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பாக ஆராயப்பட்டதாகவும் —

இது பற்றி பலரும் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இத்தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி அடுத்த மாதம் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுவதாகக் கூறப்பட்டது. (இ-3)

கொடிகாமம்...

(முதலாம் பக்கத் தொடர்)

நலிவரும் ஆவர்.

படுகாயமடைந்தவர்களில் மேலதிகமாக மூவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

பெயர் விபரம் தெரியாத இளைஞர் படுகாயமடைந்த நிலையிலும், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இராணுவத்தினரின் விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக காயமடைந்த ஏனையோரால் தெரிவிக்கப்பட்டது. (இ-139-15)

ஜே. 73 விசேட அடையாள அட்டை

யாழ்ப்பாணம், பெப். 23

யாழ். நகர் மேற்கு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்டவர்களுக்கான விசேட அடையாள அட்டை வியோகம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 00 மணிக்கு சின்னக்கடை இராணுவ முகாமில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

பிரபாகரனுக்கு வடக்கின் அதிகாரத்தை 10 வருடங்களுக்குக் கொடுப்பதற்கு ஜனாதிபதிக்கு என்ன உரிமை உண்டு? ஒரு தீர்மானம் எடுப்பதாயின் அதுபற்றி அனைவருடனும் கலந்தாலோசிக்க வேண்டும் என்று ரவிராஜ் கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தமது அமைச்சரவை உறுப்பினர்களுக்குக் கூட இதுபற்றி அறிவிக்க வில்லை. எம்மிடமும் கூறவில்லை.

இவ்விடயம் குறித்து ஜனாதிபதி முழுமையான அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என நாம் அரசை வலியுறுத்தியுள்ளோம் என்றும் அவர் கோரினார். (இ-9-3)

Institute of Informatics Studies
Jaffna, Sri Lanka.

மாபெரும் புலமைப் பரிசில் – 98
300

கடந்த 2 வருடகாலமாக யாழ். மாவட்ட மாணவர்களுக்கு கணனிச் சேவையில் காத்திரமான பங்களிப்பை வழங்கிய எமது நிறுவனம், யாழ். மாவட்ட மாணவர்களின் நலன் கருதி மாபெரும் (300 மாணவர்களுக்கு) புலமைப் பரிசில் திட்டம் ஒன்றினை மிக விரைவில் அறிமுகப்படுத்த உள்ளது.

இத்திட்டத்தில் பங்கு கொள்ள விரும்புகின்ற 16 வயதிற்கு மேற்பட்ட அனைத்து மாணவர்களும் எமது நிறுவனத்தினால் நடத்தப்பட இருக்கின்ற போட்டிப் பரீட்சையில் பங்கு கொள்ளல் வேண்டும்.

மேலதிக விவரங்கள் 7/3/98 (சனிக்கிழமை) சஞ்சீவியில்!

★ 1996&97 களில் யாழ். மாவட்டத்திலேயே அதிக கூடிய மாணவர்கள் கணனிப் பயிற்சி பெற்று வெளியேறிய ஒரே ஒரு நிறுவனம்.

- DIRECTOR -
Institute of Informatics Studies
08, Clock Tower Road, Jaffna. (இ/2947)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 861 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பதிவுகளில் 23-02-98 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.